பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 10 செவ்வாய்க்கிழமை (24.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 209

# இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு இந்தியா முடிவு!

## சீன, பாக் உதவியை நாடுவதைத் தடுக்கவாம்

புதுடில்லி, ஜூன் 24

**சீனா, பாகிஸ்தானிடமிருந்து இலங்கை தொடர்ச்சியாக ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்வது குறித்து அச்சமடைந்துள்ள இந்தியா, இதன் காரணமாக இலங்கைக்கு மேலும் இராணுவ உதவிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.**

எனினும் பேரழிவை ஏற்படுத்தாத ஆயுதங்களையே இலங்கைக்கு வழங்குவது என்ற தனது கொள்கையின்படி பெருமளவிற்கு தற்காப்பு ஆயுதங்களையே இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ளதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லையென இந்தியா கருதுகின்றது. அதேவேளை, பேச்சுகளுக்கான அழுத்தங்களைக் கொடுத்துவருவதுடன், அந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டிற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியம் என்றும் கருதுகின்றது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் சிவ் சங்கர் மேனன், பாதுகாப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 24

வடமராட்சி கிழக்கில் மணற்காடு பகுதியில் நேற்றுக்காலை 5 மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது வெடிபொருள்கள் சிலவற்றை மீட்டுள்ளனர் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிவிலியன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே இத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பதிவு செய்யாதோருக்கு கப்பல் பயணம் சனிக்கிழமையே

யாழ்ப்பாணம், ஜூன், 24

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பொது மக்களுக்குரிய கப்பல் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமையே இடம் பெறும் என்று யாழ்.அரச அதிபர் அறிவித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் ராஜதந்திரம் குறித்து ஈழத் தமிழர்கள் தரப்பில் அதிருப்தி!

கொழும்பு, ஜூன் 24

இந்தியாவின் 'சந்தடியற்ற இராஜதந்திர' நடவடிக்கைகள் குறித்து இலங்கைத் தமிழர்கள் அதிருப்தியடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள இந்தோ - ஆசிய செய்திச் சேவை, கொழும்பிற்கு வெளிப்படையாக ஆயுதங்களை வழங்குவதற்கும் அதே வேளை அதிகாரப் பகிர்விற்கு அழுத்தம் கொடுப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை தம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது எனத் தமிழ் மக்கள் தெரிவித்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடில்லிக்கு வருமாறு இந்திய அதிகாரிகள் குழு அழைப்பு விடுத்துள்ள அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சரைச் சந்திப்பதை அக்குழு தவிர்த்துக் கொண்டமை முக்கியமானது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

'இலங்கை தொடர்பான இந்தியாவின் தர்மசங்கடமான நிலையில் காணப்படும் நம்பிக்கையும், அச்சமும்' எனும் அந்த செய்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பளப் பிரச்சினைக்காகப் போராடும் ஆசிரிய சங்கங்களிடையே முரண்பாடு

### இரு கன்னைகளாகப் பிரிந்து செயற்பாடு

கொழும்பு, ஜூன் 24

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் பிரதான ஆசிரியர்கள் சங்கங்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒன்றாகப் போராட்டத்தில் குதித்த ஐந்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தற்போது இரண்டு கன்னைகளாகப் பிரிந்து மூன்று தொழிற்சங்கங்கள் ஓரணியாகவும், ஏனைய இரு தொழிற்சங்கங்களும் இன்னொரு அணியாகவும் அண்மைக்காலமாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயித்தியமலையில் கிளைமோர்த் தாக்குதல் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உயிரிழப்பு

### ஆற்றில் குளிக்கச் சென்றவேளை சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு ஆயித்திய மலைப் பிரதேசத்தில் நேற்று மாலை நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயித்திய மலை பொலிஸ் நிலையத்திற்குச் சமீபமாகவுள்ள ஆற்றில் குளிக்கச் சென்ற பொலிஸாரை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர் தாக்குதலை அடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி தலைமையில் உயர் மட்டக்குழு

## விண்ணப்பித்த அனைவரின் கோரிக்கைகளையும் பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



இ.த.விக்னராஜா



கே.கணேஸ்

கொழும்பு, ஜூன் 24

வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமரவும், தொழில் செய்யவும் அனுமதிக்குமாறு உத்தரவிடக் கோரி அப்பிரதேச வாசிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அப்படை உரிமை மீறல் மனுக்களை நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்த உயர் நீதிமன்றம், இவ்விடயம் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்காக ஐவர் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்றை நியமித்தது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா தலைமையிலான இக்குழுவில், யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். கடற்படைத் தளபதி பி.ஏ.டி. சமரசிங்க, யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

யாழ். அரச அதிபரால், வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர உரிமையுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட அனைத்துக் குடும்பங்களைச் சேர்ந்த - பொதுமக்களையும் கட்டம் கட்ட மாக விரைந்து மீளக் குடியமர்த்துவதற்கு உரியநடவடிக்கைகளை எடுக்கும்படி இந்த உயர் மட்டக் குழுவுக்கு உயர் நீதி மன்றம் பணிப்புரையும் விடுத்தது.



ஜீ.ஏ.சந்திரசிறி



பூஜிதஜயசுந்தர

முதல் கட்டமாக குடியமர்வதற்கு சுமார் 380 குடும்பங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டிருக்கின்றன என்று அரச தரப்பில் நேற்று எடுத்துக் கூறப் பட்டது.

ஆனால், மனுதாரர்கள் அதனை ஆட்சேபித்தனர். ஆயிரக் கணக்கில் குடும்பங்கள் தமது சொந்த இடத்தில் மீளவும் குடியமர விண்ணப்பித்து விட்டுக் காத்திருக் கின்றனர் என்று மனுதாரர்களின் சட்டத்தரணிகள் எடுத்துரைத்தனர். அந்த வாதத்தைக் கவனத்தில் எடுத்த உயர் நீதிமன்றம், அவ்வாறு விண் ணப்பித்த அனைவரது கோரிக்கைகளையும் பரிசீலிக்குமாறு உயர் மட்டக்குழு வுக்கு உத்தரவு விடுத்தது.



பி.ஏ.டி.சமரசிங்க

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்தனா, கே. ஸ்ரீபவன் ஆகியோரைக்கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு தங்கம்மா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தங்கம்மா அவர்கள் நேற்று (23.06.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கமலலோஜினி, செல்வராசா (ஓய்வு பெற்ற அதிபர், புலோலி அ.த.க. பாடசாலை), பாக்கியநாதன் (உரிமையாளர், விநாயகர் கடைச்சல் தொழிற்சாலை), புஷ்பராணி, விமலராணி, சுசிலாராணி (ஆசிரியர் நடேஸ்வராக் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் ம.வி.) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற மகாலிங்கம், திருநாவுக்கரசு, குலசிங்கம், கமலேந்திரராணி, ப்வளமலர் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி ஒழுங்கை, சண்டிலிப்பாய். (75683)

தகவல்: பிள்ளைகள்.

## P.T.சண்முகலிங்கம்

(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி)



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சண்முகலிங்கம் 21.06.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கலைமகளின் அன்புக் கணவரும் தயாளன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கணக்காய்வு திணைக்களம், வடமாகாணம், திருகோணமலை) அவர்களின் பாசமிகு தந்தையும் நாகலக்சுமி, சிவஞானசுந்தரி, தேவசேனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நல்லநாயகம் மற்றும் ஸ்ரீதரன், இராஜரட்ணம், சாராதாமணி, காலஞ்சென்ற இராஜயோகன் மற்றும் சுசீலாதேவி, சரோஜா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் சபாநடேசன், விஜேந்திரன், சந்திராதேவி ஆகியோரின் சகலனும் உத்தமி, குமாரதாஸ், இளங்குமரன், வாசுகி, தினேஷ், டில்றுக்சி, செந்தூரி, சேயோன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/2, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. 077 5935758 (75687)

தகவல்: மனைவி, மகன்.

## கந்தவனம் கந்தசாமி (K.K)



சோளங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தவனம் கந்தசாமி நேற்று (23.06.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - நல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை தம்பதியினரின் அன்பு மருமகனும் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சுந்தராம்பாள், தர்மாம்பாள், ஜெகதாம்பாள், ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இலட்சுமிபவான் மற்றும் கணேஸ்வரன், இரதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான முருகேசு, இராசம்மா, வேலுப்பிள்ளை (சின்னத்துரை) மற்றும் செல்லபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ரேகரன், மதுசாந், காணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2008) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் பூவரசன்திட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தீராவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி. (75688)

தகவல்: குடும்பத்தினர்.

## இராஜசிங்கம் பஞ்சலிங்கம்

(இலங்கை வங்கி, பருத்தித்துறை)

புலோலி, புற்றளையைச் சேர்ந்த இராஜசிங்கம் பஞ்சலிங்கம் நேற்று (23.06.2008)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இராஜசிங்கம் மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் மகனும் தம்பிராசா (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், புகையிரத திணைக்களம்), காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்பு மருமகனும் கௌரியின் (ஆசிரியை - புற்றளை மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும் அனோஜா, மைதிலி(மெதடிஸ்த உயர் தரப் பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.06.2008)செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மாவில் வீதி, புற்றளை, புலோலி தெற்கு, புலோலி. (75690)

தகவல்: ப.கௌரி (மனைவி).

### யோகாசனவகுப்பு

சிவலிங்கயோக கேந்திராவின் ஏற்பாட்டில் புதிய யோகாசன பயிற்சி வகுப்புக்கள் நாளை புதன்கிழமை மாலை 4மணிக்கு கந்தர் மடம், குமாரசாமிவீதியில் உள்ள வேதாந்த மடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த வகுப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் வேதாந்த மடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆங்கில தின மாவட்ட எழுத்துப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்24

மாவட்ட மட்ட ஆங்கில தினப்போட்டிகளில் எழுத்துப் போட்டிகள் நாளையும் மறுதினம் வியாழக்கிழமையும் வேம்படிமகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

தரம் 3 தொடக்கம் 9 வரையுள்ள மாணவர்களுக்கான சகல எழுத்துப் போட்டிகளும் தரம் 10 மாணவர்களுக்கான சொல்வதெழுதுதல் போட்டியும் தரம் 11 மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பார்த்து எழுதல் போட்டிகளும் நாளை இடம்பெறும்.

தரம் 10 தொடக்கம் 13 வரையுள்ள மாணவர்களுக்கான ஏனைய சகல எழுத்துப் போட்டிகளும் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும்.

குறித்த நேரத்தில் போட்டியாளர்களை கலந்துகொள்ளுமாறு போட்டியின் ஒழுங்கமைப்புக்குழுத் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.செல்வராசா கேட்டுள்ளார். (1)

## ஆங்கிலக் கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 24

கல்வி அமைச்சால் பாடசாலையை விட்டு விலகியோருக்கும் வளர்ந்தோருக்குமென நடத்தப்படவுள்ள அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறிக்கு யாழ்.வலயத்திலுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர் வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள பிராந்திய ஆங்கில ஆதார இணைப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## சமாதானம் வேண்டி கெற்பலியில் அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கெற்பலி மத்தி காளியம்பாள் ஆலயத்தில் நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலவ விசேட அபிஷேகம் நாளை புதன் கிழமை நடைபெறும். (1-207)

## அடிகாயங்களுடன் நயினாதீவு இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

அடிகாயங்களுக்கு இலக்காகி மரணமானதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலாயுதப்பிள்ளை கிருபாகரன் (வயது 23) என்பவர் நேற்று முன்தினம் காலை இறந்ததாகத் தெரிவித்து நேற்று மதியம் ஊர்காவற்றுறை பொலிஸாரால் சடலம் வைத்தி யசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நண்பர்களுடன் ஏற்பட்ட கைகலப்பே அவரது மரணத்திற்குக் காரணம் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (1-202-25)

### வேலைக்கு ஆள்தேவை

கணனி அறிவுள்ள பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை. (புத்தூர், இடைக்காடு, எல்லைக்குள் வசிப்பவர் கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: சபா பல்பொருள் விற்பனை நிலையம், பிரதான வீதி, அச்சுவேலி.

## சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய உதயனில் பிரசுரமான பழைய பாற்சங்க வீதி, இணுவிலைச் சேர்ந்த காசிப்பிள்ளை பஞ்சாட்சரம் அவர்களின் மரண அறிவித்தலில், அவரது மனைவி செல்வரத்தினத்தின் பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டது.

காசிப்பிள்ளை பஞ்சாட்சரம், செல்வரத்தினத்தின் அன்புக் கணவர் என்று சேர்த்து வாசிக்கவும்.

குடும்பத்தினர்.

# இரத்தினம் ஊர்திச் சேவைத் தளம்
# Ratnam Service Station

**வாடிக்கையாளர்களே!**

சில மாதகாலமாக மூடப்பட்டிருந்த இரத்தினம் ஊர்திச் சேவைத் தளம் 18.06.2008 முதல் மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது சேவைத்தளம் விரைவாகவும் சிறந்த முறையிலும் சேவைகளை வழங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். தொ.பே:021 222 8247 (சி-553479)

உரிமையாளர், 32, Sirampiyady Lane, Jaffna.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.S.V.மகேந்திரன்

(B.Sc., Dip in - Edu., SLTS-I)

அவர்கள் எமது கல்லூரியில் இருபத்தியொரு வருடங்கள் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி 09.06.2008 தொடக்கம் யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்திற்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக (கணிதம்) பதவி உயர்வு பெற்றுச் சென்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் வாழ்வில் பல சிறப்புகளையும் பெற்று விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். (75674)

ஆசிரியர் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## T.K.வில்வராஜா

திருநெல்வேலிப் பதியை அலங்கரித்த ராஜாவே!
கனடா மண்ணில் விண்ணுலகேகினீரே
விளையாட்டுத் துறைத் தலைவரே! ஆசிரியப் பணியை
ஆர்வமுடன் செய்தவரே!ஒன்றா! இரண்டா?
உங்கள் பெருமைகள் எடுத்து இயம்ப
வார்த்தைகளே வருகுது இல்லை ஐயா!
பெற்ற மகன் போல் பேணிவளர்த்து ஒழுக்க
சீலனாய் வாழவைத்தீர்களே!
உம் பிரிவு தாங்காது ஏங்கித் தவிக்கின்றேன்
மலையான மலை ஒன்று மண் மீது சாய்ந்து விட்டது
நான் சிலையாகி விட்டேன்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
அன்புத் தெய்வத்திற்கு எனது அன்பைக் காணிக்கையாக ,
கண்ணீர் பூக்களை சொரிந்து பிரிவால்
துயர் உற்றிருக்கும் அனைவருக்கும்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து
துயரில் நாமும் பங்குகொண்டு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பாசத்தில் திகழும்: சு.சுதன் குடும்பத்தினர்,
பத்மநாதன், தனலக்ஷ்மி குடும்பத்தினர்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
கனடா தொ.பே: 001 6138201696 (சி-553481)

# மரண அறிவித்தல்

## செல்வராசா சற்குருநாதன்

(உப அதிபர்,யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை)

செம்பாடு, பொலிகண்டிமேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வராசா சற்குருநாதன் 19.06.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற ஞானசௌந்தரியம்மாவின் அன்புக் கணவரும் உமாமகேஸ்வரனின் (கனடா) சகோதரனும் பிரபாலினி, சுதந்தரி, அன்பரசி(முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம், திருமலை), மாலதி, தவநேசன், சிவதர்சனன், நிமலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.06.2008)செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி இந்துமயானத்தில் பிற்பகல் 3 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு, பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தால் தாக்குண்ட தந்தையும் மகளும் சிறுவனின் சாதுரியத்தால் உயிர்தப்பினர்

நவாலி, ஜூன் 24

மின்சாரத்தால் தாக்குண்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த தனது மகளைக் காப்பாற்றச் சென்ற தந்தையும் அம்மின்சாரத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார். அவ் வேளை மற்றொரு மகனின் புத்தி சாதுரியத்தால் மயிரிழையில் இருவரும் காப்பாற்றப்பட்டனர்.

நவாலி, சின்னப்பா வீதியில் இடம் பெற்ற இச்சம்பவம்பற்றி மேலும்தெரிய வருவதாவது:

கடந்த 19 ஆம் திகதி இரவு 8.30 மணி. அதே இடத்தில் வசிக்கும் நாக துரை ராதிகா என்னும் 17 வயது மாணவி தமது அறைக்குள் புத்தகம் எடுக்கச் சென்ற வேளை அங்கு அறுந்து தொங்கிய மின் கம்பியில் சிக்குண்டதால் சில நிமிட நேரம் பலமாகக் கத்தியுள்ளார். இவரது அலறலைக்கேட்ட அவரது தந் தையார் ஓடிச் சென்று விடயமறியாது அவரைக் காப்பாறறக் கட்டிப்பிடித்துத் தூக்கியுள்ளார். அவரும் மின்சாரத்தால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்.

செய்வதறியாது அங்கு அயலவர்கள் திகைத்து நிற்கத் திடீரென பாய்ந்தோடிய அவரது மகன் தனது புத்திக் கூர்மை யினால் பிரதான ஆளியை (Main Switch) நிறுத்தியதைத் தொடர்ந்து இருவரும் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டனர். (202-100)

## வீதி பெரும் சேதம்

யாழ்ப்பாணம் முளவைச் சந்தியில் - மட்ம் வீதி சந்திக்கும் இடத்தில் பெரிய பள்ளமொன்று ஏற்பட்டுள்ளது. அத்துடன் வீதிக்குக் குறுக்காகச் செல்லும் கழிவு வாய்க்காலின் மேற்பகுதியும் இடிந்துபோயுள்ளது. இதனால் அவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சேதமடைந்துள்ள பகுதி கற்கள், தென்னோலை, பழைய சைக்கிள் ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இச் சேதங்களைத் திருத்தித் தர நடவடிக்கை எடுக்கவேண்டும்எனப் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-302)

# யாழ்.நகரின் சில வர்த்தக நிலையங்களில் பழுதடைந்த அரிசி விற்பனையில்!

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ். நகரில் உள்ள மொத்த வியாபார நிலையங்கள் சிலவற்றில் தரக்குறைவான - பழுதடைந்த - அரிசி விற்பனை செய்யப்பட்டு வருவதாக கொள்வனவு செய்த நுகர்வோர் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள அரிசிக் களஞ்சியங்களில் இருந்து பெறப்பட்டு மொத்த வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வரும் 10 கிலோ மூடை அரிசியே இவ்வாறு தரக்குறைவாக உள்ளது. இவை முன்னர் ரூபா 700 ஆக விற்பனை செய்யப்பட்டன.

இம் மூடைகளை இறக்குமதி செய்த மொத்த வியாபாரிகள் களஞ்சியப்படுத்தி வைத்ததனால் இம் மூடைகள் சேதமடைந்துள்ளதுடன் அரிசி கட்டிபட்டும் உள்ளது. இவைகளை சேதத்துக் கேற்றவாறு மொத்த வியாபாரிகள் விற்பனை செய்து வருகிறார்கள்.

10 கிலோ அரிசி 900 ரூபாவிற்கும், சில கடைகளில் ஆயிரம் ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகிறது. ரூபா 900க்கு வியாபாரிகளால் விற் பனை செய்யப்பட்டு வரும் 10 கிலோ அரிசி மூடைகளே அனேகமாகப் பழுதடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாகச் சுகாதாரப் பகுதியினர் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-300)

# நீதிமன்றம் உத்தரவிட்டும் கூட ஜயலத்தின் பாதுகாப்பு இன்னும் அதிகரிக்கப்படவில்லை

## அவர் மீண்டும் சட்ட நடவடிக்கை எடுக்க முஸ்தீபு

கொழும்பு, ஜூன் 24

ஐ.தே.கட்சி எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தமக்கான பாதுகாப்பை அதிகரிக்கத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துப் பல நாள்கள் கடந்தும் இன்னும் தமது பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை என்று ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரிரு நாள்கள் இருந்து பார்த்துவிட்டு இது தொடர்பாகக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாம் திரும்பவும் முறைப்பாடு செய்யப் போகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''எனக்கு நீண்டகாலமாக உயிர் அச்சுறுத்தல் இருந்தும் கூட எனது பாதுகாப்பைப் பிரதமர் குறைத்திருந்தார்.

இதற்கு எதிராக நான் நீதிமன்றம் சென்றபோது எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதை நீதிமன்றம் ஏற்று, எனது பாதுகாப்பை அதிகரிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவும் இம்மாதம் 10ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் ஆகப்போகின்றன. ஆனால் இன்னும் எனது பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை.

எனக்குத் தொடர்ந்தும் உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றமையால் நான் இன்னும் ஒரிரு நாள்களுக்கே பொறுமையாக இருப்பேன்.

அதற்குள் எனது பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நான் மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்று நீதி கேட்பேன்'' - என்றார் அவர். (சி)



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு அண்மையில் வடமராட்சியில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும், நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இராஜவரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# இராணுவத்திலிருந்து தப்பியோடிய 12 ஆயிரம் பேரைப் பிடிக்க முயற்சி

## கைது செய்ய நடவடிக்கை எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

இராணுவத்திலிருந்து தப்பியோடிய பன்னீராயிரத்துக்கும் மேற்பட்டவர்களைத் தேடிக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அரசினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்திற்குள் மீண்டும் பணியில் இணைந்து கொள்ளாத இராணுவத்தினருக்கு எதிராகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மே 2ஆம் திகதி முதல் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தை ஏற்று சுமார் ஐயாயிரம் இராணுவத்தினர் மீண்டும் பணியில் இணைந்து கொண்டனர். இக்காலப் பகுதியில் பணிக்குத் திரும்பாத - ஏற்கனவே இராணுவத்திலிருந்து தப்பியோடிய - சுமார் 11 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் - பேரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் அநேகமானவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் தப்பியோடியவர்கள். விடுதலைப் புலிகளுடன் கடந்த இரண்டு வருடங்களாகக் கடும் மோதல் இடம்பெறுகின்ற போதிலும் அக்காலப் பகுதியில் எவரும் தப்பியோடவில்லை என்றும் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

2003 இல் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஐம்பதாயிரம் பேர் அதற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் திருப்பிச் செலுத்தினால் அவர்களை இராணுவத்திலிருந்து சட்ட ரீதியாக விடுவிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மேலும் மீண்டும் இணைய விரும்புபவர்கள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் அரசு அறிவித்தது.

எனினும் இன்னமும் பலர் தப்பியோடியவர்களின் பட்டியலிலேயே உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# பரீட்சை முடிந்து ஆறு மாதங்கள்; பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை

## ஊடகவியல் மாணவர்களின் நிலை

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகவியற்றுறை முழுநேர மாணவர்களுக்கான பரீட்சை முடிவடைந்து 6 மாதங்களாகின்ற போதிலும் மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லையென மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஒரு வருட முழுநேர பயிற்சி நெறியாக 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் காணப்பட்ட சூழ்நிலை காரணமாக இப் பயிற்சி நெறி மேலும் ஒரு வருடம் காலதாமதப்பட்டு 2007 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவுபெற்று இந்தாண்டு முற்பகுதியில் பரீட்சைகளும் முடிவடைந்துள்ளன.

இப் பரீட்சைக்கு 16 மாணவர்கள் தோற்றினர். இம் மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. இதனால் மாணவர்கள் அடுத்தகட்ட செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலைமையில் காணப்படுகின்றார்கள். (202-68)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன்24

கோண்டாவில் மறு மலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் ரீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் கொக்குவில் மேற்கு வராகி வி.க.அணியும் உடுவில் ஆடி சிந்து வி.க.அணியும் மோதவுள்ளன. (202-86)

* * *

வலி.வடக்கு, ஜூன்24

அமரர் சந்திரகுமாரின் 12 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* அளவெட்டி கலைவாணி வி.க.'ஏ' அணி எதிர் அராலி சில்வெஸ்ரார் வி.க.

* மானிப்பாய் [illegible] வி.க.'ஏ' அணி எதிர் ஞானமுருகன் வி.க.'பி' அணி. (202-86)

## மாணவர்கள் பிழையின்றித் தமிழை எழுத

# ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் உதவ வேண்டும்; பிரதிக் கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

நல்லூர், ஜூன் 24

மொழி மனிதனின் ஆற்றலை வளர்க்கிறது. இன்று எமது மாணவர்கள் தமது தாய் மொழியான தமிழையே பிழையின்றி எழுதமுடியாதவர்களாக இருக்கிறார்கள் இந்த நிலை மாற ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பெரியபுலம் மகாவித்தியாலய முத்தமிழ் விழாவில் பேசிய யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசன் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருமதி மீரா அருள்நேசன் பேசும் போது மேலும் கூறியதாவது:-

முதன்மை மிக்க மொழிகளில் எமது தமிழ் மொழியும் ஒன்று. சிறப்புமிக்க அது மென்மேலும் வளர்ச்சி காண வேண்டும். [illegible] தமிழ் என்பது தவத்திரு [illegible] அடிகளாரின் கூற்று. அப்பேறுபட்ட தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நாங்கள் உலக அரங்கில் அதன் சிறப்பை மேலும் வளர்த்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தமிழையே பிழையின்றி எழுத முடியாத நிலையில் இருப்பது வருந்தத்தக்கது. இங்கு இடம் பெற்ற நிகழ்வுகள் எமது மொழியின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையில் இடம் பெற்றிருந்தன. மிகவும் உயர்ந்த படைப்புக்களாக இருந்தன. சுடர்க்கொடி நாட்டிய நாடகத்தினூடாக உயர்தர மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு இந்தப் பாடசாலை எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. கிடைக்கும் வளங்களையும் எமது உழைப்பையும் உரிய முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டிய சூழ்நிலையில் வாழும் எமது மாணவ சமுதாயம் தங்களது தாய் மொழிக் கல்வியூடாக சிறந்த மொழிவளம் மிக்கவர்களாகத் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் - என்று கூறினார். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உணவகங்களினதும் சுகாதார நிலையை மேம்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்,24

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல உணவகங்களின் சுகாதார நிலையை மேம்படுத்த சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் சுகாதார நிலையை மேலும் மேம்படுத்த பொதுமக்களின் ஒத்து ழைப்பை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்டுள்ளது.

உணவகங்களில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை அவதானிக்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

* சகல உணவகங்களும் தூய்மையாக சுகாதார முறையில் இயங்க வேண்டும்.
* உணவுகள் யாவும் இலையான் மொய்க்காது அலுமாரியில் மூடி வைக்கப் பட்டிருக்க வேண்டும்.
* சிற்றுண்டிகள் யாவும் பாவனையாளர் கேட்கும் வகை, கேட்கப்படும் அளவில் மட்டும் வழங்கப்பட வேண்டும்.
* சிற்றுண்டிகள் யாவும் இடுக்கிகள் மூலம் கையாளப்படல் வேண்டும்.
* உணவகங்களில் பணிபுரிபவர்களின் தனி நபர் சுகாதாரம் தூய்மையாக பேணப் பட வேண்டும்.
* பாவனையாளர்களுக்கு சுத்தமான, பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும்.
* பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் உணவகங்களை மதிப்பிடும் மதிப்பீட்டு படிவம் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் ஏதாவதொரு உணவகம் மேற்படி நடைமுறையை பின்பற்றத் தவறினால் பொது மக்கள் உடனடியாக அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கவும். அந்த மட்டத்தில் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாவிடில் மாவட்ட மட்டத்தில் உணவு மருந்து பரிசோதகருக்கு அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறியத்தரவும்.

* சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம் - 021 222 2645
* சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய் - 060 221 3615
* சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய் - 060 221 3614
* சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை - 060 221 3620
* சுகாதார வைத்திய அதிகாரி, பருத்தித்துறை - 021 226 4482
* சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி - 060 221 3621
* சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை - 060 221 3558
* உணவு மருந்து பரிசோதகர் - 021 222 2278
* பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - 021 222 3725

என்ற தொலைபேசி எண்கள் ஊடாக பொதுமக்கள் அறிவிக்கலாம்.

சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காத உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (202)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம். ஜூன்,24

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப.3 மணி கொற்றாவத்தை நியுட்டன் வி.க. எதிர் புத்தூர் விக்னேஸ் வரா வி.க.
* பி.ப. 4.30 மணிக்கு புத்தூர் வளர்மதி வி.க. எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் வி.க. (1)

## சிரமதானப் பணி

யாழ்ப்பாணம். 24

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சாவகச்சேரி நகர் மகளிர் விவகார அமைப்பும் இணைந்து நேற்று முன்தினம் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்தில் சிரமதானப் பணிகளை மேற் கொண்டனர்.

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (202)




யாழ்ப்பாணம்,ஜூன் 24

தச்சந்தோப்பு அரசடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.25 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 24

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

* * *

நவாலி,ஜூன் 24

நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத் திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இத்திருவிழாவில் தினமும் 4.30 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலியும் இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் 28ஆம் திகதி மாலை நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் இடம் பெற்று மறுநாள் காலை திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் புனித ஆசீரும் இடம்பெறும். (202-100)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 24

கோண்டாவில் பாரதிபுரம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (202)

# இலக்கியத்தை முழுமையாக இரசித்துச் சுவைத்து அதன் அனுபவத்தைக் காணும் வழி காட்டப்படுவதில்லை

## பயில்வு முறையின் குறைபாடு என சுட்டிக்காட்டு

சுன்னாகம், ஜூன் 24

நமது சமூகத்தில் கலை தொடர்பான, இலக்கியம் தொடர்பான பயில்வு மிக மோசமடைந்து விட்டது. பாடசாலை முதல் உயர்கல்வி நிறுவனங்கள் வரை கலையை, இலக்கியத்தை இரசிப்பதற்கான வழிகாட்டல்களைச் செய்யவில்லை. அவற்றின் பொருளை, நோக்கத்தைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, இலக்கியத்தை ரசித்துச் சுவைத்து அதன் அனுபவத்தைக் காணும் வழிகளைக் காட்டவில்லை. சொற்சேர்க்கையை, சொற்களினூடாக வெளிப்படுத்தப்படும் அனுபவ வெளியை அடையாளம் காட்டவில்லை. இதனால் கலை இலக்கியப் பயில்வு நமது சமூகத்தில் அருகிப் போகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலன்.

த.ஆனந்தமயிலின் 'ஓர் எழுது வினைஞனின் டயறி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு மதிப்பீட்டுரை வழங்கும் போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அகிலன் தமது உரையில் கூறியதாவது:-

ஈழத்து தமிழிலக்கியம் என்பது மத்திய தர வர்க்க இலக்கியமே. தலித் இலக்கிய முன்னோடி என்றெல்லாம் டானியலைக் கூறினாலும் அவருட்பட அனேகமான படைப்பாளிகளின் குரல் மத்திய தர வர்க்கக் குரலேயாகும். ஆனந்த மயில் மத்திய தர வர்க்க வாழ்க்கையை மிக அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார். ஈழத்து இலக்கிய வரலாற்றில் கவனிக்கப்படாமல் விடுபட்டுப் போன ஆனந்தமயில் தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளராக உள்ளார். அவர் போன்று கடல்சார்ந்த வாழ்க்கை அனுபவத்தைப் பதிவு செய்த ஈழத்து எழுத்தாளர்கள் எவருமில்லை எனலாம் - என்றார்.

அறிமுகவுரையாற்றிய எழுத்தாளர் அ.யேசுராசா கூறியதாவது:-

தார்மீகப் பொறுப் புணர்வு என்பது படைப்பாளிக்கு அவசியமானதாகும். பல எழுத்தாளர்கள், சஞ்சிகை ஆசிரியர்களிடம் அருகிக் காணப்படும் இப்பண்பு ஆனந்தமயிலிடம் காணப்பட்டமை முக்கியமானதாகும். அகமுக நோக்கும் ஒரு படைப்பாளருக்கு முக்கியமானது. ஆர்ப்பாட்டமற்ற அகமுக நோக்கு அவரது ஆளுமையைக் கட்டியமைத்திருந்தது. படைப்பு மொழி அதிகம் கைவரப்பெற்ற படைப்பாளியாக அவர் திகழ்ந்தார். அவரது படைப்புகள் ஈழத்திலக்கியத்தின் சிறந்த படைப்புகளாகக் கொள்ளத்தக்கவை

மாற்றுக் கருத்துக்களை ஊக்குவிக்கும் திறந்த உரையாடல்களே எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் கலை இலக்கிய மேம்பாட்டிற்கும் அவசியமாகும். அதை நாம் வளர்க்க வேண்டும் - என்றார்.


மதிப்பீட்டுரையாற்றிய தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் தமது உரையில் -

இலக்கியம் பற்றிய எமது புரிதலும் பார்வையும் போதாமலுள்ளது. இதுவே ஆனந்தமயில் போன்ற சிறந்த படைப்பாளிகள் கொள்ளப்படாத நிலைமைக்குக் காரணமாகும். கலை, இலக்கியம் பற்றிய சமூக மதிப்பீடு குறைந்தமைக்கும் இந் நிலையே காரணமாகும் - என்றார்.

சமூகவியல் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நூலை வெளியிட்டு சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

ஆ.நித்திலவர்ணன் நன்றியுரையாற்றினார்.

(அ-38)



எழுத்தாளர் அ.தம்பித்துரையால் பாடப்பட்ட 'பாலும் தெளிதேனும்' இசை இறுவட்டின் வெளியீட்டு விழா அண்மையில் சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் நடைபெற்றது.

மூதறிஞர் சிற்பி இறுவட்டை வெளியிட்டு வைக்க பொறியியலாளர் சி.சிவபாலன் பெற்றுக் கொள்வதையும் அருகில் அ.தம்பித்துரை, சிவத்திரு வ.குமாரசாமி ஐயர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:சுன்னாகம் செய்தியாளர்)

## சங்கத்தானையில் தையல் வகுப்பு

யாழ்ப்பாணம். 24

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் யுவதிகளுக்கான இலவசதையல் பயிற்சி வகுப்பினை அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்த தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முப்பது யுவதிகள் பயிற்சி நெறியில் பங்குபற்றுவதாகவும் கழகச் செயலாளர் லயன் கா.இராசதுரை தெரிவித்தார்.

(202- 207)


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமையாற்றும்
சண்முகலிங்கம் தயாளன் அவர்களின் அன்புத் தந்தை
**தர்மலிங்கம் சண்முகலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவிப் பணிப்பாளரும் சக அலுவலர்களும் கணக்காய்வு உப அலுவலகம், யாழ்ப்பாணம்.

பணிப்பாளரும், சக அலுவலர்களும் மாகாண கணக்காய்வுத் திணைக்களம் வடக்கு மாகாணம், திருகோணமலை

## இந்துமத தேசிய தலைவிக்கு எமது இறுதி வணக்கம்



உலகம் போற்றும் தலைவியின்
இந்து தர்மப் பணியைக் கௌரவித்து
எமது இறுதி மரியாதையைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

நெல்லியடி, கரவெட்டி.
மருதம் நிறுவனம்
(75474)

## மணமகன் தேவை

1982 ஆம் ஆண்டு, முதலாம் பாதம் கேட்டை நட்சத்திரம், அரச தொழில் புரியும் மணமகளுக்கு அரச தொழில் அல்லது வெளிநாட்டில் PR உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை.
தொடர்பு: விளம்பர இல: 3109
உதயன். (75673)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியரான
விஜயநாதன் அவர்களின் அன்புத் தாய்
**நாகம்மா அப்பாப்பிள்ளை**
அவர்களின் மறைவையிட்டு மனம் நெகிழ்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம். (75658)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையான
அன்ரனீற்றோ அன்ரனீற்றாவின் மாமியார்
**திருமதி லாசறஸ் பிலோமினம்மா**
20.06.2008 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரது மறைவினால் கலங்கித் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது சங்க உறுப்பினர் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இறைவனின் திருவடியில் நித்திய ஆறுதல் பெற உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
யா/கைதடி குமாரசாமி வித்தி, கைதடி வடக்கு.
(75650)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மீண்டும் உயர்கின்றன அத்தியாவசியப் பொருள்களின் விலைகள்

## உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.மாவட்டத்தில் மீண்டும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அத்துடன் பொருள்களுக்குப் பெரும், தட்டுப்பாடும் காணப்படுகின்றது.

யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி, மா, சீனி போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடுகள் காணப்படுகின்றது. இதனை காரணமாக வைத்து வெளிச் சந்தையில் மேற்படி பொருள்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அரிசி 110 ரூபா வரையும் சீனி 80 ரூபா வரையிலும் மா 90 ரூபாவிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் இரண்டு மாதங்களுக்கான நிவாரணத்தை உடனடியாக வழங்குவதனால் பணத்திற்கான பொருள்கள் இல்லாமல் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கள்ளச் சந்தையில் உயரும் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பணத்திற்கான பொருள்களின் விற்பனையையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவசர வேண்டுகோளை விடுக்கின்றனர். (202-68)

# நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் சிறுவர் ஆலோசனைப் பெட்டிகள்

கொழும்பு, ஜூன்24

நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் தோறும் சிறுவர் ஆலோசனைப் பெட்டிகள் வைக்கும் புதிய திட்டத்தை சிறுவர் அபிவிருத்தி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

பாடசாலைகளில் சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து அதற்குரிய தீர்வு காணும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் இயங்கிவரும் சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் ஒத்துழைப்புடன் கல்விக் கோட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் முதற்கட்டமாக இச் சிறுவர் ஆலோசனைப் பெட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆலோசனைப் பெட்டிகளில் இடப்படும் முறைப்பாடுகளைப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அரச அதிபர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் எனவும்,

இதன் மூலம் சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (202)

# மூர்ச்சித்து விழுந்த தன் தந்தையின் உயிரைக் காப்பாற்றினான் முதலுதவிப் பயிற்சி பெற்ற அவரின் மகன் – மாணவன்!

## மாணவர்கள் அந்தப் பயிற்சியைப் பெறுவது அவசியம் என்கிறார் டாக்டர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

''இதயம் தாக்குதலுக்குள்ளாகி மூர்ச்சித்து விழுந்த தந்தைக்கு மகன் செய்த முதல் உதவி தந்தையின் உயிரைக் காப்பாற்றியது. இவ்வாறு முதலுதவி அளிப்பது தொடர்பான பயிற்சி பெற்றிருந்த மாணவன் தனது தந்தையின் உயிரைக் காப்பாற்றி சாதனை புரிந்துள்ளார்.

ஆதலால் மாணவர்கள் அனைவரும் முதலுதவி அறிவையும், பயிற்சியையும் பெறவேண்டும் என்றார் வைத்திய கலாநிதி என்.சிவசுப்பிரமணியம்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ''மானுடர்'' இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் ஆய்வுரையாற்றிய வைத்தியகலாநிதி சிவசுப்பிரமணியம் தமது உரையில் -

மானுடவிடியற் கழகத் தினரின் இவ இறுவெட்டு வெளியிடலும் இன்று அவசியமான பணியாகும். சுகாதார நிறுவனங்களின் பங்கு பற்றுதல் இன்றி மருத்துவபீட மாணவர்களும்,பாடசாலை மாணவர்களும் இணைந்து இவ்அரிய பணியை மேற்கொள்வது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என்றார். அவர் மேலும் கூறியதாவது:

இன்று காண்பிக்கப்பட்ட இறுவெட்டுக் காட்சியில் காயம், இரத்தப் பெருக்கிற்கான முதலுதவிகள், எரிகாயத்திற்கான முதலுத விகள், சுழுக்கு, நரம்பு பிறள்வின் போது முதலுதவி, கை, கால் அவயம் என்பு முறியும் போது செய்ய வேண்டிய முதலுதவி, சுவாசத்தடை, இதயத்துடிப்பு தடைப்படல் என்பவற்றுக்கான முதலுதவிச் செயற்பாடு களும், முறைகளும் இங்கு நல்ல முறை யில் எடுத்துக்காட்டப்பட்டன. முக்கோணத் துண்டு கட்டுதல், கண்ணில் எரிகா யத்துக்கான முதலுதவி என்பன மேலும் சிறந்த முறையில் விளக்கப்பட முடியும் எனினும் இவ் இறுவெட்டானது செஞ்சிலுவைத் தொண்டர்கள்,சென்ஜோன்ஸ் அம்பு லன்ஸ் படையினர், சாரணர் படையினர், மாணவர்கள் என முதலுதவியுடன் தொடர்பான அனைவரும் பார்த்து பயனடைய வேண்டும். மேலும் முதலுதவி புரியும் ஒருவர் எப்போதும் அதற்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண் டும்.

எரிகாயங்களுக்கு பற்பசை இடுவதோ, மைபூசுவதோ தவறான செயல்கள் எரிகாயம் ஏற்படும் போது அதன் மீது குளிர் நீரை தொடர்ந்து ஊற்றுவது சிறந்த முதலுதவி முறையாகும். இது போல நாட்டுப்புறங்களிலுள்ள முறைகளுக்கு மாற்றாக இம் முதலு தவி முறைகள் எல்லோரும் அறிந்து கைக்கொள்வதன் மூலம் நோயாளரை இலகுவில் சுகப்படுத்த உதவ முடியும். மேலும் இன்று வெளியிடப்படும் இவ் இறுவெட்டானது அதிக சமூகப் பயனுடையது. இதன் வெளியீட்டை செய்யும் மானிட விடியற் கழகத்தின் மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் - என்றார்.

இந்நிகழ்வில் மேலும் பலர் உரையாற்றியதுடன், இறுதியில் மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (ப-267)

# தேங்காய் மட்டையின் விலை யாழில் உயர்வு

குருநகர், ஜூன்24

யாழ்ப்பாணத்தில் தேங்காய் மட்டை விலை உயர்வடைந்துள்ளது.

தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து உழவு இயந்திரம் மூலம் வியாபாரிகளால் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படும் தேங்காய் மட்டை ஒன்று 3 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் வரை 2 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-51)

# நிர்வாகத் திறமையினூடாக சமூகத்திற்கு சிறந்த பங்காற்றியவர் அன்னை தங்கம்மா

நல்லூர், ஜூன்24

பெண்களாலும் சிறந்த நிர்வாகத்தை வழங்க முடியும் என்பதை தனது நிர்வாகத் திறமையினூடாக பறைசாற்றியவர் சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்.

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தில் நடைபெற்ற சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துப் பேசிய சைவப் பிரகாச வித்தியசாலை அதிபர் ச.சத்தியவரதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிவத்தமிழ்ச் செல்வியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தில் அண்மையில் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் போதகர் அருட்திரு ஆர். ஜோண்செல்வம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் அதிபர் மேலும் பேசும் போது கூறியதாவது:-

சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் பணியாற்றிய அம்மையார் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்காகவும் அனாதரவான பிள்ளைகளுக்காகவும் அரும்பணியாற்றி அவர்களின் வாழ்விற்கும் எதிர்காலத்திற்கும் ஒளியேற்றியவர். அவரது மறைவு சைவத்திற்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும் - என்றார்.

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தின் தலைவரும் தென்னிந்திய திருச்சபைக் குருவுமான அருட்திரு ஜோண்செல்வம் பேசும் போது;

ஆலயங்களூடாக சமூகத்திற்கு சிறந்த பணியாற்ற முடியும் என்பதை தனது நிர்வாகத்தில் உள்ள தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தினூடாக செயற்படுத்திக் காட்டிய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் தமது வாழ்நாளை ஆதரவற்ற பிள்ளைகளுக்காகவும் எதிலிக ளான மக்களின் நலனுக்காகவும் செலவிட் டார்.

மக்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்ட அம்மையாரவர்கள் எமது மொழியின் வளர்ச்சிக்காகவும் தன்னை இணைத்துக் கொண்டவர். சைவத்திற்காகவும் தமிழுக்காகவுமாக வாழ்ந்த அவரை இழந்து துயரில் மூழ்கியுள்ள தமிழுலகம் அவரை என்றும் நினைவு கூர்ந்திருக்கும்- என்றார். (202-111)

# தலைமைத்துவப் பயிற்சி

நல்லூர், ஜூன் 24

காரைநகர் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங் சங்களைச் சேர்ந்தவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி நெறி காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நாளை புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை வரை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. (202-111)

# மேல்நாட்டு சங்கீத செயன்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் மேல்நாட்டு சங்கீத செயன்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழிமூலம் நடத்தப்படும் Iஆம் வகுப்பு முதல் VIIIஆம் வகுப்பு வரையும் மற்றும் டிப்ளோமா ஆகிய பரீட்சைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்று எதிர்வரும் முதலாம் திகதி முதல் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், முகவரி எழுதிய 5 ரூபா முத்திரையொட்டிய 9'x4' அளவுடைய கடித உறையுடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி முகவரியில் நேரடியாகவும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 011 2785230 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ 011 2784232 என்ற தொலைநகல் இலக்கம் ஊடாகவோ பெற்றுக் கொள்ளலாம்.(202)

# மல்லாகம் நீதிமன்றத்தில் சான்றுப் பொருள்கள் ஏலத்தில்

வலி.வடக்கு, ஜூன்24

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகளின் போது சான்றுப் பொருள்களாக சமர்ப்பிக்கப்பட்டு மீளப் பெறப்படாத பொருள்கள் நீதிமன்றினால் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

பொருள்களுக்கு உரிமை கோருபவர்கள் இருந்தால் ஏல விற்பனை இடம்பெறவுள்ள எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

28ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ள இந்த ஏல விற்பனைக்குரிய பொருள்களை ஏல விற்பனை இடம்பெறும் நாளில் பார்வையிடலாம். (202)



யாழ்.பிரதேச செயலகத்தினால் ''எளியதோர் வாழ்வு நிலை வேறானதோர் எதிர்காலம்'' என்ற பொருளில் உலக, சுற்றாடல் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

யாழ்.மத்திய சுற்றாடல் அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

யாழ்.பிரதேச உதவிச் செயலாளர் ம.ஜெகூ, யாழ்.விவசாய திணைக்கள பிரதி விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் - நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்விக்கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ்ப்பாண கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன:

முடிவுகள் வருமாறு:-

**ஆக்கம்-எழுத்து**

*பிரிவு1:* சு.சுபநிலா (புனித ஜோன் பொஸ்கோ வித்தி), ஜோ.அஜித்குமார் (நாவாந்துறை றோ.க.வித்தி), ம.பவித்திரா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

**கட்டுரை**

*பிரிவு2:* ப.கதிர்தர்சினி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ஞா.ஜனனி (நாவாந்துறை றோ.க.வித்தி), பே.பாத்திமாசாலினா (பாஷையூர் சென்.அன்ரனிஸ்)

*பிரிவு3:* டீன் ஜெனிபேட் (சென். ஜோன்ஸ் கல்லூரி), பா.முகுந்தன் (வண். நாவலர் ம.வித்தி), அ.ஜெனிற்றா (சென். ஜேம்ஸ் மகளிர்)

*பிரிவு 4:* அ.அ.நிறோஜன் (சென். ஜேம்ஸ் மகா வித்தி), த.மஞ்சு (சென். மேரிஸ் வித்தி.), வ. தயாளன் (கொட்டடி நமசிவாய வித்தி.)

**இலக்கணம்**

*பிரிவு4:* ஆ.சஞ்சயன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), இ.சுவிதா (வைத்தீஸ்வராக் கல்லூரி), தி.காயத்திரி (சென்.மேரிஸ் வித்தி.)

*பிரிவு 5:* இ.தவராணி (வைத்தீஸ்வராக் கல்லூரி), கா.சஞ்சீவிக்கா (சன்மார்க்க ம.வித்தி.), றி. றா.விக்ரர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

**குறுநாடக ஆக்கம்**

*பிரிவு4:* ஜெ. றெமிலா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), ஏ.பிரகதீஸ்வர் (சென். ஜோன்ஸ் கல்லூரி), குயின் ஜோண்ஒவ் ஆக் சார்ளஸ் (சென்.ஜேம்ஸ் மகாவித்தி)

*பிரிவு5:* எடின் போறோ (சென் சாள்ஸ் ம.வித்தி.), நி.சோனியா (சன்மார்க்க ம.வித்தி.), தே. துவாரகன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

**கவிதை ஆக்கம்**

*பிரிவு4:* ந. பிரதீபன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), செ.செந்திரிக்கா (வைத்தீஸ்வராக் கல்லூரி), வே.அ.ஜெறோன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

*பிரிவு5:* த.கஜனி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ச.மேரி சர்மிளா, ந.தவரூபன் (வைத்தீஸ்வராக் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

*பிரிவு4:* ஏ. கஜானனி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), த.சன்னியா (நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா), இ.சோபிதா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை)

*பிரிவு5:* ம. கோமளராஜ் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), அ.செரின் சிறோமி (வேம் படி மகளிர் உ.த பாடசாலை), க. சர்ஜனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

**இலக்கியம் நயத்தல்**

*பிரிவு5:* ஸ்ரீ.லக்ஷிகா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), சி. நித்தியா (வைத்தீஸ்வராக் கல்லூரி), பி.றீ.நிதர்சன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி)

**பேச்சு**

*பிரிவு1:* ர. சாந்தரூபன் (யாழ். மத்திய கல்லூரி), செ. நிதுஷா (சுண்டிக்குளி ம.க), கு.வெ. எட்மண்ட் சங்கீத்வதனன் (சென்.ஜோன் பொஸ்போ வித்தி)

*பரிவு2:* ம.லூட்ஸ் பூரணி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), க.றிவிகரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கு.நர்மதா (கொட்டடி நமசிவாய வித்தி.)

*பிரிவு3:* ஜே. ஜெனிங்ஸ் சறோன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி),த.சாம் நிரோஷன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ரா.சிந்துஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*பிரிவு4:* அ.றெமோசிகன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), மு.சிவசக்தி(வேம்படி மகளிர் உ.த. பாடசாலை),அ. மேரிதர்சியா (பாஷையூர் சென் அன்ரனீஸ்)

பிரிவு5: க.லோஜனா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), சி.அஜந்தன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ப.அஜந்தன் (யாழ். மத்திய கல்லூரி)

**வாசிப்பு**

*பிரிவு1:* சி.சிவானுஜா (புனித ஜோன் பொஸ்கோ வித்தி), பா.கீர்த்தனி (கொட்டடி நமசிவாய வித்தி), சி.யாதவன் (சென் ஜோன்ஸ் கல்லூரி)

*பிரிவு2:* அ.பென்ஜமின் (சென். ஜோன்ஸ் கல்லூரி), ம. சஜீவன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), இ.சோபிதா (வைத்தீஸ்வராக் கல்லூரி)

**நடனம்- தனி**

பிரிவு1: செ.யுவனிகா (கொழும்புத்துறை இ.ம.வி), ம.மேரி றேச்சன் (திருக் குடும்ப கன்னியர் மடம்), கு. டிளானி (புனித ஜோன் பொஸ்கோ வித்தி.)

*பிரிவு2:* சி.பாவனா(வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), சி.மிதிலா (சுண்டிக் குளி மகளிர் கல்லூரி), க. கிரிசாந்தன் (யாழ். மத்திய கல்லூரி)

*பிரிவு3:* க.அபிநயா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), க. கௌதமன் ( யாழ். மத்திய கல்லூரி), லி. ஏனோலின் (திருக் குடும்ப கன்னியர் மடம்)

*பிரிவு4:* ஜெ.பிரியவதனி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ஜோ.சுரேஷினி (திருக் குடும்ப கன்னியர் மடம்), பு.யபர்ணா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*பிரிவு5:* ஞா.குயிந்தினி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), மு.துளசி (வைத்தீஸ்வராக் கல்லூரி), ச.வைஸ்ணவி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

**பாவோதல்**

*பிரிவு1:* ம.பிரியந்தி (புனித ஜோன் பொஸ்கோ வித்தி.), ச.முகுந்தன் (சென் மேரிஸ் வித்தி.), த. நிஸ்மி யஸ்ரின் (திருக் குடும்ப கன்னியர் மடம்)

*பிரிவு2:* சி. சபார்த்தனி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), லி.டக்சாயினி (திருக் குடும்ப கன்னியர் மடம்), ந.கடோற்கஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி)

*பிரிவு3:* ச.சாரங்கா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), க.துஷியந்தி (திருக் குடும்ப கன்னியர் மடம்), இ.சின்னத்திரேசா (சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

*பிரிவு4:* இ.கோபிகா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ரா. ஆன் சோனியா (சென். ஜெம்ஸ் ம.பாட), கு.சுவிற்றா (கொட்டடி நமசிவாய வித்தி)

*பிரிவு5:* க.சோபனா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), இ.தாரணி (சன்மார்க்க ம.வி.), றெ.கஜந்தா (சென்.ஜேம்ஸ் மக ளிர் பாடசாலை)

**இசையும் அசைவும்**

*பிரிவு1:* பூ. செரூபா (சென்.ஜோன்ஸ் கல்லூரி), வே.சாயிகா (புனித ஜோன் பொஸ்கோ வித்தி.), இ.துளசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

**இசை-தனி**

*பிரிவு 2:* ர.ஸகிஷ்ணா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ப. வரதீபன்(சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜோ.தபிதா (கொழும்புத்துறை இ.ம.வி.)

*பிரிவு3:* ஜெ.டிலூசி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), டொ.அ.ஜெரின்சியா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), கே.பிரியங்கி (திருக்குடும்ப கன்னியர்மடம்)

*பிரிவு 4:* த.தாரகினி (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), பு. பிரணவன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) ப.அமலினி (சுண்டிக் குளி மகளிர் கல்லூரி)

*பிரிவு5:* தெ.பவனுஜா (வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ர.சுர்சாகித்தியன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), வி.கார்த்திகா (கொழும் புத்துறை இ.ம.வி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

*பிரிவு1:* கோ. ஜெகஜீவன்((புனித ஜோன் பொஸ்கோ வித்தி), கா.கார்த்திகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இ.திலக்சனா(துரையப்பா வித்தி)

**இசை - குழு 1**

யாழ். மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் உ.த. பாடசாலை

**இசை-குழு 2**

வேம்படி மகளிர் உ.த. பாடசாலை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, திருக் குடும்ப கன்னியர் மடம்.

**நடனம்- குழு 1**

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உ.த.பாடசாலை, கொழும்புத்துறை இ.ம.வித்தி.

**விவாதம் (தி.போ)**

யாழ். மத்திய கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சன்மார்க்க ம. வித்தி.

**நாடகம் (தி.போ)**

சென் ஜோன்ஸ் கல்லூரி, திருக் குடும்ப கன்னியர் மடம், சென். பற்றிக்ஸ் கல்லூரி.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

நாவற்குழி, ஜூன்24

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வி. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் சகலரையும் கலந்து கொள்ளுமாறு கூட்ட ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (202-288)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், திவ்ய ஜீவன சங்கத்தின் ஆரம்ப காலப் பணிகளில் முன்னின்று உழைத்த பெருந்தகை

சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**



அவர்களின் மறைவு எமக் கெல்லாம் ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா குருதேவர் சிவானந்தரின் பாதாரவிந்தங்களோடு இரண்டறச் சேரப் பிரார்த்திக் கின்றோம்.

**திவ்ய ஜீவன சங்கம்**

நல்லூர்,

யாழ்ப்பாணம்.

(75658)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

**திருமதி நடராசா நாகரத்தினம்**



புலோலி

தெற்கு, புலோலி.

திதி: 24.06.2008

விஷ்ணு பாட்ஸ்,
162, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3907

சி.நடராசா,
29, இராசசிங்க வீதி,
கொழும்பு 06.
தொலைபேசி
0112360541

அன்புடன் நினைவுகூரும்

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 28 ★ 10 ★ 1941



மறைவு 25 ★ 05 ★ 2008

**திருமதி நாகம்மா நடேசு**

*திதி: அபரபக்க பஞ்சமி*

*அன்பால் அரவணைத்து ஆசை மொழியூட்டி*
*மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழ வைத்த தெய்வமே!*
*உன் புன்னகை மலர் காணாது எம்மை*
*தவிக்க விட்டுச் சென்றதேனோ?*
*நீங்கள் எம்மை விட்டு*
*முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்*
*உன் வதனமுகம் எம் மனதோடு வாழுமம்மா*

25.05.2008 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் அஞ்சலிப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (24.06.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்கு பற்றுவதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

*காளி கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு, கோண்டாவில்.*
*T.P. 0776157419*

*மகன்மார்:*
ந.ரவிச்சந்திரன்,
ந.ஜெயச்சந்திரன். *(பிரான்ஸ்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

◈ சரியான விடையின் கீழ் கீறிடுக.


01. 112, 224, 336, **என்ற ஒழுங்கிற்கு ஏற்ப அடுத்து உருவாக்கக் கூடிய எண் யாது?**
   1) 446 2) 448 3) 347

02. ACE, EGI, IKM **என்ற கோலத்தில் அடுத்து வரவேண்டியது..**
   1) MOP 2)NPQ 3) MOQ

◈ இலக்கங்கள் தரப்படாத அடைப்புக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுக.


03.

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | 1 | 12 |
| | 8 | 4 | 14 |
| | | 9 | 19 |
| 15 | 16 | 14 | |




04.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | | 14 |
| 2 | | 9 | 16 |
| | 4 | 3 | 15 |
| 16 | 16 | 13 | |




◈ தரப்பட்ட படத்திற்கு பொருத்தமான சொற்கூட்டத்தின் கீழ்க் கோடிடுக.

05. 
   1) கடினம், வாசம், வெறுப்பு
   2) அழகு, மென்மை, வாசம்
   3) வன்மை, இயற்கை, அவலட்சணம்

06. 
   1) மின்சாரம், வெளிச்சம், வெப்பம்
   2) இருள், ஒலி, மின்சாரம்
   3) மின்சாரம், ஒளி, இயற்கை ஒளிமுதல்

◈ பின்வரும் வாக்கியங்கள் குறித்து நிற்கும் தனிச்சொல்லைத் தருக.

07. *போர்வீரர் மார்பில் அணியும் பாதுகாப்புக் கருவி*
   1) மேலாடை 2) கவசம் 3) ஏப்ரன்

08. *எண்பதாவது ஆண்டு நிறைவு விழா*
   1) அமுதவிழா 2) மணிவிழா 3) பவளவிழா


09. *சுதந்திரம் அற்று வாழ்பவன்*
   1) அகதி 2) அடிமை 3) அனாதை

◈ பின்வரும் கணிதச் செய்கைகளில் இடைவெளியில் வரவேண்டிய இலக்கத்தை தெரிக.

10. *3685 = 3000 +* ☐ *+ 80 + 5*
   1) 600 2) 60 3) 6

11. *6759 =* ☐ *+ 700 + 50 + 9*
   1) 60 2) 6000 3) 6

12. *தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதியைக் குறிக்கும் பின்னம்.*
   1) $\frac{3}{8}$ 2) $\frac{2}{4}$ 3) $\frac{3}{6}$



◈ பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

13. *மண்ணரிப்பை ஏற்படுத்தாத காரணி..*
   1) காற்று 2) மழை 3) கிணற்றுநீர்

14. *எளிய பொறிக்கு உதாரணமாக கொள்ளக் கூடியது..*
   1) சாய்தளம் 2) இயந்திரப்படகு 3) மின்னழுத்தி


15. *பென்சில் கூர் தயாரிக்கப் பயன்படும் கனிப்பொருள்..*
   1) இல்மனைற். 2) காரியம் 3) நிலக்கரி

16. *கிறிஸ்தவர்களின் புனித நூல்...*
   1) திரிபீடகம் 2) பைபிள் 3) திருக்குர்ஆன்

17. *தேசிய அடையாள அட்டையைப் பெற விண்ணப்பிக்க வேண்டிய இடம்...*
   1) வைத்தியசாலை 2) பிறப்பு இறப்பு பதிவுக் காரியாலயம்
   3) கிராமசேவையாளர் செயலகம்

◈ தரப்பட்ட உருவில் கட்டமிடப்பட்ட பகுதிக்கு பொருத்தமான பகுதியைத் தெரிக.

18. 




◈ எழுத்துப் பிழைகளற்ற சொல்லைத் தெரிவு செய்க.

19. *ஊண்டுகோள் , ஊன்றுகோல் , ஊன்றுகோள்*

20. *ஆக்ரமித்தல் , ஆக்கிறமித்தல் , ஆக்கிரமித்தல்*

◈ சரியான விடையின் கீழ் கீறிடுக

21. *இக்கடிகாரம் காட்டும் நேரத்திற்கு 45 செக்கனுக்கு பிந்திய நேரம் யாது?*
   1) 4 மணித்தியாலம் கழிந்து 14 நிமிடம் 50 செக்கன்
   2) 4 மணித்தியாலம் கழிந்து 20 நிமிடம் 16 செக்கன்
   3) 4 மணித்தியாலம் கழிந்து 18 நிமிடம் 25 செக்கன்

22. *இவ் உருவில் காணப்படும் வட்டங்கள் எத்தனை?*
   1) 4 2) 3 3) 2



23. *216 மணித்தியாலங்களில் உள்ள நாட்கள்..*
   1) 12 2) 9 3) 10

24. $\frac{1}{8}, \frac{1}{4}, \frac{1}{2}$ *அடுத்து வரும் எண்ணைத் தெரிக.*
   1) $\frac{1}{3}$ 2) 1 3) $\frac{1}{10}$

25. *ஒருவன் சிறு வயதுப்பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம் என்பதற்கு மிகப் பொருத்தமான பழமொழி*
   1) விளையும் பயிரை முளையில் தெரியும்
   2) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
   3) சிறுதுளி பெரு வெள்ளம்

26. *"உள்ளங்கை நெல்லிக்கனி போல" என்பதன் பொருள்*
   1) உள்ளங்கை நெல்லிக்கனியின் வடிவம்
   2) உள்ளங்கையில் நெல்லிக்கனி உள்ளது
   3) தெட்டத்தெளிவாக தெரிதல்

27. *நோயாளி : வைத்தியசாலை எனின் ............................ பாடசாலை ஆகும். இங்கு வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்*
   1) அதிபர் 2) மாணவர் 3) வைத்தியன்

28. *குயில் தனது அழகான கூட்டில் முட்டைகளை கவனமாக அடைகாத்தது. இவ் வாக்கியத்தின் கருத்துப் பிழையானதற்கான காரணம்...*
   1) குயில் முட்டை இடுவதில்லை.
   2) குயில் கூடு கட்டுவதில்லை.
   3) குயில் பாலூட்டியாகும்.


◈ பின்வரும் கருத்துப் பொருத்தமான. சொல்லின் கீழ் கீறிடுக.

29. **கடவுள் இருக்கின்றார் என்று நம்புவன்..**
   1) நாத்திகன் 2) ஆத்திகன் 3) தேவராளன்

30. **மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை..**
   1) அல்லங்காடி 2) நாளங்காடி 3) நவீனசந்தை

31. **அறிஞர்கள் பலர் கூடி வாதிடுங் களம்..**
   1) பட்டிமன்றம் 2) அரங்கம் 3) கவியரங்கம்


◈ சரியான விடையின் கீழ் கீறிடுக.

32. 


**X இருப்பது Y க்கு வடக்குத்திசையில்ஆகும். அதன் படி Z இன் எத்திசையில் Y இருக்கிறார்..**
   1) தென்கிழக்கு 2) வடமேற்கு 3) வடகிழக்கு

33. $\frac{3}{7}$ **என்னும் பங்கைச் மிகச் சரியாக நிழற்றக் கூடிய உரு..**




34. 

**இந்த சதுரவடிவக் கம்பியின் சுற்றளவு 32Cm ஆகும். இந்த சதுரவடிவக் கம்பியின் மீது ஓர் எறும்பு நேராக $\frac{3}{4}$ பங்கைப் பயணம் செய்தது. எனின் அது பயணஞ் செய்த தூரம்..**
   1) 16cm 2) 24cm 3) 28cm

35. **2008 ஆம் ஆண்டு நெட்டாண்டு எனின் அதனை அடுத்து அமையும் நெட்டாண்டுகளைக் குறிக்கும் வருடங்கள்...**
   1) 2012, 2014 2) 2010, 2014 3) 2012, 2016

36. **ஒருவனிடம் இருந்த மாம்பழங்களில் $\frac{6}{8}$ பங்கு விற்பனையாகி விட்டது. மிகுதியாக உள்ள பழங்கள்..**
   16 எனின் அவனிடம் இருந்த மொத்தப் பழங்கள் எவ்வளவு?
   1) 80 2) 64 3) 48

37. **குமரன் காலையில் வீதியால் சென்ற போது அவனது இடதுகைப்பக்கமாக சூரியன் உதித்தது. குமரன் சென்ற திசை..**
   1) மேற்கு 2) வடக்கு 3) தெற்கு

◈ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் நிறைவு செய்வதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

38. **சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல் யானை ......................**
   [ கதறும் , கத்தும் , பிளிறும் , முக்காறமிடும் ]

39. ஒற்றுமை என்பதன் எதிர்ச் சொல் வேற்றுமை என்பது போல் ஒருமை என்பதன் எதிர்ச்சொல்
   [ பன்மை, பெருமை, சிறுமை, செம்மை ]

40. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்பது போல் வயலும் வயல் சார்ந்த இடமும்
   [ பாலை, மருதம், குறிஞ்சி, நெய்தல் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்களைப் பாதுகாக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## 29 சர்வதேச ஊடக அமைப்புகள் ஐ.நா. செயலரிடம் கூட்டாக வேண்டுதல்

கொழும்பு, ஜூன் 24

பத்திரிகையாளர்களைப் பாதுகாக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி கோரி 29 சர்வதேச ஊடக அமைப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளன.

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்துடன் இணைந்து செயற்படும் அமைப்புகளே இக்கடிதத்தை எழுதியுள்ளன.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர், அதிகாரிகளால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசினாலும் இராணுவத்தினாலும் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் விடுக்கப்படும் அறிக்கைகள் குறித்துத் தெரியப்படுத்துவதற்காகவே இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமும் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கான கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய தொழில்துறையினருக்கும் எதிராக அளவுக்கதிகமான வன்முறையைப் பயன்படுத்தியவர்களை மேலும் தூண்டும் விதத்திலான இவ்வாறான அறிக்கைகளுக்கு இக்கடிதத்தில் கண்டனமும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் அச்சம் மற்றும் துன்புறுத்தல் சூழ்நிலைகளின் கீழ் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மோதலில் ஈடுபடும் சகல தரப்பினரும் பத்திரிகையாளர்களது தொழில்சார் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமெனக் கோரும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1738 ஆவது பிரகடனத்திற்கும் குறிப்பிட்ட ஊடக அமைப்புகள் ஆதரவளித்துள்ளன.

மேலும் இலங்கை அரசை ஊடகவியலாளர்களுக்கு எதிரான அறிக்கைகளை வெளியிடுவதனைக் கைவிடச் செய்வதற்கான முயற்சியில் தமக்கு ஆதரவளிக்குமாறு செயலாளர் நாயகத்தை ஊடக அமைப்புகள் கேட்டுள்ளன. (சி)

# ரணில் இவ்வாரத்தில் ஐரோப்பிய விஜயம்

கொழும்பு, ஜூன் 24

ஐரோப்பாவிற்கான சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டன், பிரான்ஸ் உட்படப் பல நாடுகளுக்கும் செல்லவுள்ளார். அங்கு முக்கிய தலைவர்களைச் சந்தித்து அவர் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் தனது விஜயத்தின் போது பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக அமைச்சர் லோர்ட் மலோச் பிறவுணை சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது. இலங்கை தொடர்பாக பிரிட்டன் மேலும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் வலியுறுத்துவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

பிரிட்டனின் அரசியல்வாதிகளுடனான எதிர்க்கட்சித் தலைவரின் சந்திப்பிற்கான முக்கிய நோக்கம் குறித்து உறுதியான தகவல்கள் இல்லாத போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இப் பேச்சின்போது முக்கிய இடம்பிடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# அரச முகாமை உதவியாளர் சேவை தர உயர்வுப் பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

அரச முகாமை உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்பிற்கு திறமை அடிப்படையில் பதவி உயர்த்துவதற்கான பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி அட்டை கிடைக்காத விண்ணப்பதாரிகள் 0112785230 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ 0112784232 என்ற தொலைநகர் இலக்கம் ஊடாகவோ தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார். (202)

# மகாஜனவின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 24

தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியின் நிறுவியவர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி சி.அனந்தசயன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கனகசபை சிவபாலன் கலந்து கொள்வார்

நினைவுப் பேருரையை யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி கந்தஞானியார் இளங்கோ ஞானியார் நிகழ்த்துவார். (203)




வவுனியா, வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை யு.என்.டி. பி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாவற்குளத்தில் பொது நூலகக் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது.

இக் கட்டடத்தின் திறப்பு விழாவில் யு.என்.டி.பி.நிறுவன பொறியியலாளர் எஸ்.ஈசன் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் நிகழ்வின் பிரதம விருந்தினரான வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.அச்சுதன், பிரதேச சபைச் செயலாளர் சு.விஜயதாஸ், நகரசபைச் செயலாளர் எஸ்.ஜெயராஜ் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.

# யாழ்.மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு ஐ.ஓ.எம்.நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.மாவட்டத்தில் உள்ள 150 விளையாட்டுக் கழகங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

இதற்கென மேற்படி நிறுவனம் 30 லட்சத்து 19 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான பிரேரணை அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டது. (202-300)

# 2000 ஆம் ஆண்டு மே மாதத்தில் உண்டான அழிவுகள், அவலங்கள் மற்றும் இடப்பெயர்வும் பாதிப்பும் பதிவில் சேரவேண்டியவை

## வாசகர் திருமுகம்

'சமூக உளத்தாக்கம் தமிழர் மத்தியில் அதிகரிப்பு-08 கட்ட வன்தாக்கங்களின் கடும் விளைவு இது' என்ற தலையங்கத்தைக் கொண்ட வைத்தியகலாநிதி சி.யமுனாநந்தாவின் ஆக்கத்தினை 16.06.2008 அன்று வெளிவந்த 'உதயன்' நாளிதழில் கண்டேன். ஆர்வத்துடன் படித்தேன். தாங்கள் செய்துவரும் மனிதாபிமான நோக்குடனான இத் தொண்டிற்கு முதற்கண் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கட்டுரையில் குறிப்பிட்டுள்ள 08 கட்டங்களுள் அடங்கும் 06 ஆம் கட்ட நிகழ்வில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலும், இந் நிகழ்வின் பிரதிபலிப்பால் யாழ். மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் தாக்கங்களைப் போக்குவதற்கு சர்வதேச சமூகம் எடுத்த நடவடிக்கைகளுள் ஓர் அங்கத்தில் பங்கு கொண்டவன் என்ற வகையிலும் என் வசம் உள்ள தகவல்களை, தரவுகளையும் எனது கருத்தையும் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது எனக் கருதி இந்தத் திருமுகத்தை எழுதுகிறேன்.

குறிப்பிட்ட 6 ஆம் கட்ட தாக்கத்தின் விளைவாக தென்மராட்சியில் யுத்தத்தின் நேரடி விளைவாகப் பெரும் 'அழிவுகள்' ஏற்பட்டன என்பது முற்றிலும் உண்மை. இந்நிகழ்வுகள் சம்பந்தமாக கட்டுரையில் தரப்பட்டுள்ள சுருக்கமான விவரத்தில் "2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட தென்மராட்சி அழிவுகள், இடம்பெயர்வுகள், மரணங்கள், காயங்கள்" என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஓர் அங்கமாக யாழ்.மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை, கொழும்புத்துறை போன்ற மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலிருந்து மக்கள் ஒட்டுமொத்தமாக, சடுதியாக 2000 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் கோரியதை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். அத்தோடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வரும் பாஷையூர் வாழ் மக்களில் பெரும் பகுதியினரும் இத்தகைய இடம்பெயர்வுக்கு உள்ளாகினர் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இந் நிகழ்வின்போது அரியாலைப் பிரதேசத்தில் மட்டும் 2060 குடும்பங்கள் (8182 மக்கள்) வாழ்ந்து வந்தன.

அரியாலை, கொழும்புத்துறை மற்றும் பாஷையூர் ஆகிய பகுதிகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளடங்காதவை. 1995 இல் ஏற்பட்ட இடம்பெயர்வினால் பாதிக்கப்பெற்ற யாழ். மாவட்ட ஒட்டுமொத்த மக்களுக்கு 1996 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் மீளக் குடியமரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆயினும், 2000 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த மேற்படி யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசித்த மக்கள் அழிவுகள், களவுகள், பொருள்கள் இழப்புக்கள் போன்றவற்றைச் சந்தித்தது மட்டுமல்லாமல் பல கெடுபிடிகள், சிரமங்கள் மத்தியில் 2001 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்தே மீளக் குடியமர முயற்சிகள் மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது என்பதை நாம் மறந்து விட முடியாது.

சற்று வசதிபடைத்தவர்கள் முதலிலும் ஏனையோர் பின்பும் இடையிடையே மீளக் குடியமர்ந்தனர். 2002 ஆம் ஆண்டு முடிவு வரை இப் பிரதேசங்களில் அரச அலுவலகங்களோ, பாடசாலைகளோ, வழிபாட்டு நிலையங்களோ இயங்கவில்லை. 2002 ஆம் ஆண்டு முடிவுவரை இப்பிரதேச வாழ் மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்ந்தனர்.

1998 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட யாழ். கிளையில் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலராகக் கடமையாற்றியதனால் எனக்கு ஏற்பட்ட அனுபவம், 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற மேலே சுட்டிக் காட்டப்பட்ட மக்களின் இடம்பெயர்வைத் தொடர்ந்து (தென்மராட்சி உட்பட) சர்வதேச செஞ்சிலுவைக் குழு யாழ். அலுவலகத்தினால் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட அவசர நிகழ்ச்சித் திட்ட நிவாரண நடவடிக்கையின் ஓர் அங்கமாக, யாழ். மாவட்டத்தில் இயங்கிய ஏனைய ஐக்கியநாடுகள் மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்களின் இணைந்த ஒத்துழைப் போடு 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப் பெற்ற நீர் மற்றும் சுற்றாடல் சுகாதாரக் கிளைக்குப் பொறுப்பாகச் செயற் படும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. என்னுடன் 10 வெளிக்கள உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு சகல வசதிகளும் வழங்கப் பெற்ற ஓர் அணியாக இயங்கி யாழ். மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் செயற்பட ஆரம்பித்த நலன்புரி நிலையங்களில் தங்கிய இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவை ஆற்றியது.

என்னிடம் கைவசம் இருக்கும் தரவுகளின்படி. பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கிளை அமைப்புக்களின் ஒத்துழைப்போடு யாழ். மாவட்டத்தில் கட்டுரையில் குறிப்பிட்ட 6 ஆம் கட்ட நிகழ்வின் விளைவாக, நிர்வகிக்கப் பெற்ற நலன்புரி நிலையங்களின் சுருக்கமான விவரம் பின்வருமாறு அமைகின்றது.:

2000 ஜூன் மாதம் ஆரம்பத்தில் இயங்கிய மொத்த நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை 145. மக்கள் உற்றார் மற்றும் நண்பர்களுடன் இணைந்து கொள்ள முன்வந்ததன் காரணமாக ஜூன் மாத முடிவில் 132 நலன்புரி நிலையங்கள் இயங்கின. இவற்றில் 3,916 குடும்பங்களைச் சேர்ந்த 15,048 மக்கள் தங்கியிருந்தனர். மொத்தம் 09 பிரதேச செயலக பிரிவுகளில் மேற்படி 132 நலன்புரி நிலையங்களும் இயங்கின.

2000 ஆம் ஆண்டு முடிவில் 14 நிலையங்களாக மாற்றம் பெற்று (163 குடும்பங்கள் - 613 மக்கள்) 2001 ஓகஸ்ட் வரை நீடித்து அம்மாத முடிவில் 07 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு நிலையம் மட்டும் இயங்கியது.

அரியாலை. எஸ்.ரி. பத்மநாதன்

# பலாக்காய்கள் தலையில் வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மரத்திலிருந்து இரண்டு பலாக்காய்கள் தலையில் வீழ்ந்ததில் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

கொக்கைச் சத்தகத்தினால் குழை அறுத்தபோது பலாக்காய்கள் அடுத்தடுத்து தலையில் வீழ்ந்து காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த அ.பாலசிங்கம் (வயது 53) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-207)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தண்ணீர்த் தாங்கி

யாழ்ப்பாணம், ஜூன் 24

நெகோட் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தண்ணீர் தாங்கி நிறுவப்படவுள்ளது.

இதற்கென 9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நெகோட் அமைப்பின் உதவித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் தெரிவித்தார். (202-300)

# கொழும்பு ஸாஹிரா பழைய மாணவருக்கு

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் எழுபதுகளில் (1970 - 79 வரை) பயின்றவர்களை அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க எழுபதுகளில் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விவரங்களை கல்லூரி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்தத்தைத் தொடர்வதற்காக கடன்வாங்கிக் குவிக்கும் அரசு

'கடன் வாங்கிக் கல்யாணம்' என்பார்கள். ஆனால் இலங்கைத் தீவில் 'கடன் வாங்கி யுத்தம்' என்ற புதிய கொள்கை கடைப்பிடிக்கப்படுகின்றது.

தீவிர யுத்த முனைப்பில் இருக்கும் அரசு, நாட்டின் பொருளாதார வலு நிலைமையைத் தாண்டி யுத்தத்துக்குக் கொட்டிக் கொடுக்கிறது. இதற்காகக் கடன் வாங்கும் படலம் கட்டுமட்டின்றித் தொடர்கின்றது.

கடன் வாங்கிக் காரியங்களை நடத்தும் இலங்கை அரசின் செயற்போக்கால் நாட்டின் பொருளாதாரம் பெரும் விபரீதத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என சர்வதேச பொருளாதாரக் குறியீடுகளை அளவீடு செய்யும் முகவர் அமைப்புகள் தொடர்ந்தும் அபாய எச்சரிக்கை எழுப்பி வருகின்றன. தர நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை மிகக் கீழ் மட்டத்துக்கு அவை கணிப்பிட்டு அறிவிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

சர்வதேச உதவிகளாக - சொற்ப வட்டிக்கு - நீண்ட காலக் கடன்களைப் பல்வேறு நாடுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் நிலைமை மாறி, அறா வட்டிக்கு சர்வதேச வர்த்தக வங்கிகளிடம் கடன் வாங்கிக் குவிக்கும் பெரும் இழுக்கு நிலைக்கு நாடு போய்விட்டது.

'ஸ்டாண்டட் சார்ட்டட் வங்கி' யிடமிருந்து சுமார் ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாவை ஏப்ரல் முதல் வாரத்தில் கடனாகப் பெற்றுக் கொண்ட இலங்கை, அந்தக் கையோடே பிணை முறித் திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களிடமிருந்து மேலும் சுமார் இரண்டாயிரத்து இருநூறு கோடி ரூபாவை அறவிடவும் - கடனாகப் பெறவும் - முயற்சி எடுத்திருக்கின்றது.

யுத்த தீவிரத்தில் குறியாக இருக்கும் அரசு, இந்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினமாக 16 ஆயிரத்து அறுநூறு கோடி ரூபாவை (அதாவது சராசரியாகத் தினசரி ஐம்பது கோடி ரூபாவை) ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால் பாதுகாப்புச் செலவினம் போகின்ற போக்கைப் பார்த்தால் இவ்வாண்டுக்கான பாதுகாப்புத்துறைச் செலவு 20 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டும் எனக் கணக்கிடப்படுகின்றது.

இப்படி அதிகரித்துச் செல்லும் பாதுகாப்புச் செலவினம் - ஆட்சி முறையில் இடம்பெறும் ஊழல், மோசடிகளால் விரயமாகும் நிதி - நல்லாட்சி தவறிய போக்கினால் ஏற்படும் இழப்புகள் மற்றும் மோசமான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்படும் பின்னடைவுகள் என்று எல்லாப் பக்கங்களாலும் ஏற்படும் நட்டங்களை ஈடுகட்டுவதற்குக் கடன் வாங்கிக் குவிப்பதையும், புதிதாகப் பண நோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளுவதையும் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் அந்தப் 'பொருளாதாரத் தற்கொலை' மார்க்கத்தில் குதித்திருக்கின்றது அரசு.

சர்வதேச நாடுகளிடமிருந்து ஒன்றரை வீதத்துக்கும் குறைவான வட்டியுடன் 25 முதல் 30 வருட நீண்ட காலக் கடன்களை - அதுவும் ஆரம்பத்தில் பத்து வருட காலத்துக்குத் திருப்பிச் செலுத்தும் கடப்பாடு இல்லாத சொகுசு கடன்களைப்பெற்று நாட்டின் காரியங்களை ஆற்றி வந்த இலங்கை அரசு, இப்போது ஐந்து வருட காலத்தில் முழுதாகத் திருப்பிச் செலுத்தும் கடப்பாட்டுடன் சுமார் ஆறாயிரம் கோடி ரூபாவை உயர் வட்டியில் வர்த்தக வங்கிகளிடம் வாங்கித் தள்ளி, நாட்டைப் பெரும் கடனாளியாக்கி வருகின்றது.

இதற்கிடையில், நாட்டில் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான இடைவெளி என்றுமில்லாதவாறு கூடியிருப்பதும் நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் வீழ்த்தப் போவதற்கான ஆரம்ப சமிக்ஞையாக - குறியீடாக - சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலத்தில் நாட்டின் ஏற்றுமதியை விட இறக்குமதியின் பெறுமதி இருபதாயிரம் கோடி ரூபா அதிகம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒருபுறம் ஏற்றுமதிகள் குறைய மறுபுறத்தில் இறக்குமதிக்காகச் செலவிடும் தொகை வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் எந்த நாட்டிலும் - முன்னெப்போதும் இல்லாதவாறு - பண வீக்கம் மிக மோசமாக உயரும் நாடு என்ற பெருமையையும் இலங்கை இந்த ஆட்சியின் கீழ் பெற்றுக்கொண்டு விட்டது.

பணவீக்கம் 30 வீதத்தை எட்டிய நிலையில் பொருள்களின் - அத்தியாவசியப் பொருள்களின் - விலைகளும் எகிறிவிட்டன.

அது மாத்திரமல்ல. மூலதனக் கட்டமைப்புகளுக்காகவோ அல்லது சமூகக் கட்டுமானங்களுக்காகவோ அல்லது அதுபோன்ற பிற அபிவிருத்தித் திட்டங்களுக்காகவோ அரசு கடன் வாங்குமானால் அதையாவது ஓரளவு நியாயம் எனச் சகித்துக்கொள்ள முடியும். அத்தகைய சமூகக் கட்டுமானங்கள் மூலம் - அல்லது அபிவிருத்தி மூலம் - நாட்டில் வளர்ச்சியும், விருத்தியும் ஏற்படும், கடன் சுமையை எதிர்கொள்ளும் வலுவை அத்தகைய விருத்தித் திட்டங்கள் தரும் என்று நம்பி இருக்கலாம். ஆனால் இந்த அரசோ மீள் எழுந்துவரும் செலவினங்களையும், சம்பளங்களையும், ஏற்கனவே வாங்கிய கடன்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தவும் கடன் வாங்கிக் குவிக்கின்றது. இத்தகைய போக்கு பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதல்ல.

இப்படியே இந்த நாடு இன்னும் சில காலத்துக்குப் போகுமானால் 'தோல்வியடைந்த நாடு'கள் என்ற வரிசையில் இலங்கை சேர்க்கப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்காது.

# லங்கா ஐ.ஓ.ஸி. - பெற்றோலிய அமைச்சு இழுபறி குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஜூன் 24

இலங்கையின் பெற்றோலியவள அமைச்சிற்கும் இலங்கையில் செயற்படும் இந்திய நிறுவனமான 'லங்கா ஐ.ஓ.ஸி' கம்பனிக்கும் இடையே உருவாகியுள்ள முறுகல் நிலை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள அதேவேளை, கடந்த சனிக்கிழமை புதுடில்லியில் இது குறித்து அவசர மாநாடொன்றும் இடம்பெற்றிருக்கின்றது.

பெற்றோலிய வள அமைச்சு, லங்கா ஐ.ஓ.ஸி. நிறுவனத்திற்கு, டீசலின் விலையை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் விலையின் அளவுக்குக் குறைத்து விற்குமாறும், இல்லையேல் லங்கா ஐ.ஓ.ஸி. நிறு வனத்தின் எரிபொருள் நிரப்புநிலையங்களைத்தான் கையகப்படுத்தப் போவதாகவும் எச்சரிக்கும் கடித மொன்றை அனுப்பிய பின்னரே இந்த நிலை உருவாகியுள்ளது.

இந்தியா இது குறித்து கவலையடைந்துள்ளதுடன் இவ்விடயத்தில் முற்றிலும் இலங்கைத் தரப்புக்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் இலங்கை அரசின் கொள்கைக்கு ஆதரவளிப்பதாகவே லங்கா ஐ.ஓ.ஸி. நிறுவனம் பல மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் லங்கா ஐ.ஓ.ஸியின் செயற்பாடுகள் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளமையையும்-

அதன்படி அந்த நிறுவனம் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில் செயற்படலாம், விலைகளில் மாற்றங்களை மேற்கொள்ளலாம் என்பன அதில் அடங்குகின்றன என்பதையும் -

அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை கையகப்படுத்தப் போவதாக விடுக்கப்பட்டிருக்கும் ஒரு தலைப்பட்சமான எச்சரிக்கை இலங்கை அரசின் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் கொள்கைக்கு எதிர்மாறானது என்றும் அந்தக் கொள்கைக்குப் பெரும் ஊறுவிளைவிக்கும் அம்சம் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வகையான அச்சுறுத்தல்கள் ஏனையவர்களுக்கு நேரடி முதலீட்டை மேற்கொள்வதைத் தடுக்கும் என்றும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இது மாறானது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பஸ் பிரயாணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி

## குண்டுவெடிப்புக்களை அடுத்து

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் சமீபத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து பஸ்களில் பயணம் செய்யும் பொதுமக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண, பொதுமக்கள் கொழும்பிற்கு வருவதையும் குறைத்துக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புதிய பாதுகாப்பு போக்குவரத்து நடைமுறைகள் காரணமாகவும் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீண்டதூர பஸ்கள் காலிவீதி மற்றும் டுப்ளிகேஷன் வீதிகளில் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அதிகாரிகளுடன் தாங்கள் பேச்சுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

வலி. கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்குமான சத்துணவு விநியோகம் தொடர்பாக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

போரூட் நிறுவன பிரநிதிகளும் கலந்துகொள்ள இருப்பதனால், அனைத்து ஆசிரியர்களையும் வருகை தருமாறு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (202)

# 'இறை விழுமியம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ். கிறிஸ்துநாதர் ஆலயத்தினரின் 'இறை விழுமியம்' நூல் வெளியீடு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள ஆல யத்தில் அமைந்துள்ள முரண்பாடு கற்கைக்கான ஆய்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புப்பேராயர்அதிவணடுலிப் டீசிக்கேரா ஆண்டகை நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டு உரை நிகழ்த்துவார்.

ஆசியுரையை இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் எஸ்.பி. நேசகுமாரும் ஆய்வுரையை புனித சவேரியார் குருமட விரிவுரையாளர் அருட் கலாநிதி பி. யோசப்தாஸ் ஜெயரட்ணமும் நிகழ்த்துவர்.

நயப்புரையை உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ் நிகழ்த்துவார். (202)

# தொழில் அபிவிருத்திக்கான பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வலி.வடக்கு, ஜூன் 24

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் தூரக்கல்வி நவீன செயற்திட்டத்தின் கீழ் தொழில் அபிவிருத்திக்காக ஊதியம் பெற்றுத்தரும் திட்டத்தில் அடங்கும் பயிற்சிகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் உயர் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களினூடாக குறுகிய கால தொழில் தொடர்புபட்ட பயிற்சி வழங்கப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றியவர்களும் மற்றும் ஊதியம் பெறும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற விரும்புபவர்களும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி 30 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், குடும்பத்தின் வருமானம் 20 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டதாகப் பெறுபவர்களாகவும் ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றியவராகவும் இருக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை 20.06.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். இத்திட்டத்தின் கீழ் 20 பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (202-86)

# தங்க நகையைக் கண்டெடுத்து அதிபரிடம் ஒப்படைத்த மாணவன்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

வீதியில் அனாதரவாகக் கிடந்த ஒரு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியையும், அதனுடன் இருந்த பதக்கத்தையும் கண்டெடுத்து அவற்றைத் தனது பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்த மாணவன் பாடசாலை அதிபரினாலும் கல்விச் சமூகத்தாலும் பாராட்டப்பட்டார்.

தென்மராட்சி கிழக்கு உசன் பகுதி மாணவனே இவ்வாறு பாராட்டப்பட்டவன் ஆவார்.

உசன்- இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் 12 கலைப்பிரிவில் கல்வி கற்கும் - விடத்தற்பளையைச் சேர்ந்த நவரத்தினம் டிறோசன் என்ற மாணவன்- தவசிகுளம் பகுதியால் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த பொழுது அந்த வீதியில் தேடுவாரற்று காணப்பட்ட தங்கச்சங்கிலியையும், அத்துடன் இருந்த பதக்கத்தையும் கண்டெடுத்து - தனது பாடசாலையான உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் சி.மனோகரனிடம் ஒப்படைத்தார்.

அந்தத் தங்கச் சங்கிலிக் குரியவர் அதனை அறிந்து அதிபருடன் தொடர்பு கொண்டு சங்கிலிக் குரிய அடையாளம் மற்றும் சங்கிலிக் குரிய பற்றுச் சீட்டுக்கள் காண்பித்ததையடுத்து சங்கிலி உரிய பெண்ணிடம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து - சங்கிலியை ஒப்படைத்த மாணவன் அதிபரினால் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் சங்கிலியை பெற்றுக் கொண்ட இளம் பெண் நன்கொடையாக அந்த மாணவனுக்கு ரூபா இரண்டாயிரத்தை அதிபர் மூலமாக வழங்கினார். மாணவனிடம் வழங்கப்பட்ட அன்பளிப்பு இரண்டாயிரம் ரூபா பணத்தையும் அந்த மாணவன் மீளவும் பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக அதிபர் சி.மனோகரனிடம் வழங்கினான். மாணவனது இச் செயலைப் பலரும் பாராட்டினர். இம் மாணவனது செயல் ஏனைய மாணவருக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது. (202-131)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 11 | 25.06.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | சப்தமி |
| | பி.இ 02.15 வரை |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | பி.இ 12.10 வரை |
| சுபநேரம் : | 04.25 - 05.55 |
| ராகுகாலம் : | 11.55 - 01.25 |

# கிணறு வெட்டிய நிலத்தில் ஷெல் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்24

கிணறு கட்டுவதற்காக நிலத்தை வெட்டிச் செல்லும் பொழுது சுமார் 5 அடி ஆழத்தில் வெடிக்காத நிலையில் ஆட்லெறி ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டுவில் கிழக்கு வங்களாவடி வீதியில் உள்ள மின்சாரசபை ஊழியர் ஒருவரின் வீட்டிலேயே அந்த ஷெல் மீட்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் கிணற்றை வெட்டும் பொழுது மண்வெட்டி இரும்பில் வெட்டுவதை உணர்ந்து மெதுவாக, மண்ணைத் தோண்டும் நிலையில் ஷெல் வெளிப்பட்டுள்ளது. உடனடியாக அருகில் உள்ள முகாமில் படையினருக்குத் தெரிவித்துள்ளனர். இந்த ஷெல் 2000 ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது வீழ்ந்து வெடிக்காத நிலையில் புதைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (202- 131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடப் பொருள்களின் விலையேற்றத்தால் பாடசாலை பௌதீகவளம் மந்த நிலையில்!

## வலயக்கல்விப் பணிப்பாளர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன்24

யாழ்.குடாநாட்டில் இன்று கட்டடப் பொருள்களின் விலைகள் மிக அதிகரித்துள்ளன. இப் பொருள்களுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பாடசாலைகளுக்குக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கும் நன்கொண்ட நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்நிலை பாடசாலைகளின் பௌதீகவள அபிவிருத்தியில் மந்த நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா குறிப்பிட்டார்.

மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ''இமாஸ்'' நிறுவனத்தால் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் நூலகத்தைச் சம்பிரதாய பூர்வமாக நாடாவைவெட்டி அவர்திறந்து வைத்தார். பருத்தித்துறை மக்கள் வங்கி இக்கட்டட நிர்மாணத்திற்கான அனுசரணைகளை வழங்கியிருந்தது. விழா அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியை திருமதி ஆர். பரமானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்விப் பணிப்பாளர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில் குறிப்பிட்டதாவது

நூலகம் இல்லாத பாடசாலை மாணவர்களின் சுய கற்றலை ஊக்குவிக்க முடியாது. இன்றைய கல்வித் திட்டத்தில் பாடசாலை நூலகங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் பாடசாலை நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

மனிதனின் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்தி அவனைப் பூரண மனிதனாக உருவாக்குவதில் வாசிப்புமிக இன்றியமையாத சாதனமாகத் திகழ்கின்றது. மாணவர்கள்மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பாடசாலை நூலகங்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

வித்தியாலய அதிபர் கனகலிங்கம் தலைமையுரையில், பாடசாலைகளில் மாணவர்களுக்கு அறிவைப்பரப்பும் பிரதான களமாக நூலகங்கள் விளங்கு கின்றன. இதனாலேயே கல்வித் திணைக்களமும் பாடசாலை நூலகங்களின் அபிவிருத்தியில் அதிக கவனமெடுத்து வருகின்றது-என்றார். (218)

## சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன்24

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தின நிகழ்வுகள் இன்று வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சம்மேளனத் தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷும் கௌரவ விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் கலந்து கொள்வர்.


அனேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Diploma in Ms Office
Diploma in DTP
Diploma in Hard Ware



Certificate in Visual Basic
Certificate in Java
Certificate in C++
Certificate in HTML

கணனி யுகத்தில் தடம் பதித்திட சிறுவர்களுக்கான

Kids Program வகுப்புகள்

- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- Multimedia மூலமான விளக்கங்கள்.
- வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.
- இலகு முறையிலான கட்டணங்கள்.
- ஒவ்வொரு பாடமுடிவிலும் பரீட்சைகள்.
- தரமான சான்றிதழ் வழங்கப்படும்.

உங்கள் பதிவுகளை 30.06.2008 வரை மேற்கொள்ளலாம்.

CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue,
Chundukuli, Jaffna.
Tel: 021 2223805
E-Mail : catwasomi@sltnet.lk





அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய சர்வதாரி வருட மஹோற்சவம் - 2008

மேற்படி ஆலய வருட மஹோற்சவம் சர்வதாரி வருடம் ஆனிமாதம் 15 ஆம் நாள் 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனிமாதம் 25 ஆம் நாள் (09.07.2008) தீர்த்த உற்சவத்துடன் நிறைவுற திருவருள் பாலித்துள்ளது.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - 29.06.2008 | ஞாயிறு |
| சப்பறம் | - 07.07.2008 | திங்கள் |
| தேர் | - 08.07.2008 | செவ்வாய் |
| தீர்த்தம் | - 09.07.2008 | புதன் |
| பூங்காவனம் | - 10.07.2008 | வியாழன் |

அடியார்கள் ஆசாரசீலராய் ஆலயத்துக்கு வருகை தந்து அன்னையைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை ஆலய லண்டன் அறக்கட்டளையினர் வழங்கிய நிதியில் இருந்து அன்னதானம் வழமை போல் நடை பெறும் என்பதனையும் தெரிவிக்கின்றோம்.


அம்பிகையைச் சரண்புகுவோம்
அதிக வரம் பெறுவோம்.

24.06.2008 (75617) பரிபாலன சபையினர்.


## உதயன் விடைத்தாள் வினாத்தாள் I விடை 10.06.2008

| | | | | |
|---|---|---|---|---|
| 1) D | 2) 2 | 3) 3 | 4) 4 | 5) b |
| 60) b | 7) 3 | 8) 1 | 9) 3 | 10) 3 |
| 11) 2 | 12) 1 | 13) 2 | 14) 3 | 15) 2 |
| 16) 1 | 17) 2 | 18) 3 | 19) 2 | 20) 2 |
| 21) 3 | 22) 4 | 23) வீடுகள் | 24) பக்கங்கள் | 25) 3 |
| 26) 2 | 27) 2 | 28) 1 | 29) 2 | 30) 3 |
| 31) 1 | 32) 3 | 33) 2 | 34) 2 | 35) N |
| 36) F | 37) 3 | 38) 3 | 39) 8 | 40) 3635 |

## வினாத்தாள் II

(01) 1) காலை 2) நண்டுகள் 3) நதியிலே/கங்கையிலே
4) ஆறுதலாக/மெதுவாக 5) நித்திரைவிட்டு எழும்புவாய்
6) பறவை/பூ/தாமரை/ஓடம்
7) இனிய 8) நீ 9) உங்களது
10) எங்கே எங்கேயோ/காண காணவே
(02) நான் வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பினேன்.
(03) உதவி செய்தல் (04) அடிமை
(05) திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
(06) 1) வாழி 2) பரிசளிப்பு விழா
(07) 1) Animals 2) Wind
3) Rain 4) Iam a boy
(8) 1) அவருடன் செல்லுங்கள் 2) புகைத்தல் வேண்டாம்
3) புத்தகத்தை மூடுங்கள்
(09) 1) உங்களுடைய அம்மாவின் பெயர் என்ன?
2) எனது அம்மாவின் பெயர் சாந்தி
(10) 1) 2 2) 3 3) 2 4) 3 5) 1 6) 2
7) 4 8) 3 9) 2 10) 3 11) 4 12) 2
13) 1 14) 3 15) 3 16) 3 17) 2 18) 3
19) 4 20) 3
(11) 1) எல்லே 2) கரப்பந்தாட்டம்
(12) 1) வேட்டைக்காரன்/ஓநாயன் 2) தென்சிலுவை
(13) நவில் தவிர் உணர்வானாய் நமதேர் வலியானாய் நவில் சுதந்திரமானாய்
(14) 
(15) 1) ஆணமக்கு 2) குப்பைமேனி
(16) 1) கரப்பான் 2) இலையான்
(17) 1) காலி/மாத்தறை/அம்பாந்தோட்டை 2) கிரிகொரங்க
3) பொலனறுவ 4) கண்டி 5) சப்ரகமுவ 6) ஆங்கிலேயர்
(18) (01) 1) DBCA 2) 400 2) 8,5,4 3) 22 CM 4) 102
5) 21 CM 6) ரூபா 8.40 7) 60 ரூபா 8) 4 சதுர சென்ரி மீற்றர் 9) 64 CM 10) 50
11) ரூபா 17500,00 12) 10 முறை 13) 405 KM
14) 24 வருடங்கள்
(19) வரைபு
(20) வரைபில் நிழற்றுதல் (21) 201 (22) 19
(23) 27 (24) 630 (25) 405
(26) பொருத்தமான வசனங்கள்.

## சுகாதாரப் பணிமனையின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 24

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள், வைத்திய நிறுவனம் தொடர்பான பிரச்சினைகள், தேவைகள் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுகாதார பிரச்சினைகள் தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடமாடும் சேவை ஒன்று நடை பெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் நண் பகல் 12 மணிவரை இச்சேவை நடைபெறவுள்ளது.

பிரச்சினைகள் தொடர்பான அலுவலர்கள் தமது கடிதங்களைத் தங்களது நிறுவனத் தலைவர்களின் சிபார்சுடன் அன்றைய தினம் கொண்டு வருமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)

## எழுத்தாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்24

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொதுநூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையினர், எழுத்தாளரைக் கௌர விக்கும் நிகழ்வினை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

கவிமாமணியும் குழந்தை இலக்கிய கர்த்தாவுமாகிய கல்வயல் வே.குமாரசாமி இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்.

'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' என்னும் பெயரிடப்பட்ட இந் நிகழ்வு பிரதேச செயலர் வே. சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலாசிரியர் வே. குமாரசாமியின் நூல்கள் இந் நிகழ்வில் ஆய்வு செய்யப் படவுள்ளதாக ஆலோசனை சபைச் செயலாளர் திருமதி கா. பாலச்சந்திரன் தெரிவித்தார். (202-207)

### தவறிவிட்டது

சண்முகம் பாக்கியம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல : 415630174V) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] வீதியிலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்.

## போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த கணித, விஞ்ஞான விநாடி வினாப் போட்டிகள், நடைபெற விருப்பதையிட்டு பிற்போடப்பட்டுள்ளன.

போட்டிகள் நடைபெறும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

### முதலாம்ஆண்டு நினைவலைகள்



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமா கவும் மண்டைதீவை வசிப்பி டமாகவும் தற்போது கோப்பாயில் வசித்த வருமான

அமரர்
கந்தையா செல்லத்தம்பி
(ஓய்வுபெற்ற பரிசாரகர், மந்திகை அரசினர் வைத்தியசாலை)
திதி: நேர்பிறை ஷஷ்டி: 24.06.2008

அன்பின்திருவுருவாய் -எமை
ஆளாக்கி வைத்தவரே
அன்னையவள் பாதியிலே -எமை
அந்தரிக்க விட்டுச் சென்ற பின்னும்
தந்தை நீ எமக்கு தாயுமாயிருந்தீர்
தரணியில் நாம் தலை நிமிர்ந்தோம்
ஆறாத்துயர் தந்துஆண்டவன் அடி சேர்ந்தீர்
ஆண்டொன்றல்ல அது பல கடந்தாலும்
உங்கள்நினைவலைகள் எம்மோடு நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்கும்
மார்க்கம்புரை,
கோப்பாய்வடக்கு,
கோப்பாய்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(75669)

### நான்காம்ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 . 04 . 1936



மறைவு
07 . 07 . 2004

திரு.வேலுப்பிள்ளை குமாரசாமி

பார்புகழ வாழ்ந்து வந்தீர்கள்
பண்புடனே எங்களை வளர்த்து வந்தீர்கள்-பப்பா
கரம் கூப்பிவேண்டுகின்றோம் காலமெல்லாம்
தங்களின் ஆசி எங்களுக்கு வேண்டும்.

கைதடி மேற்கு,
கைதடி.
(75666)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி நிறுவன முகாமையாளர் திருமலையில் வீட்டின் முன் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஜூன்24

திருகோணமலை, கல்லூரி வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.50 மணியளவில் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் மாவட்ட முகாமையாளர் இனந் தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த ரவி சறோசன் (வயது 36) என்பவரே சுட்டுக் கொல்லப் பட்டவராவார். அவர் மூன்று பிள்ளை களின் தந்தையாவார்.

அவர் வழமைபோல கடற்கரையில் ஓய்வு எடுத்துவிட்டு தமது 'பிக்கப்' வாகனத்தில் வீடு திரும்பினார். வீட்டுக்கு செல்லும் ஒழுங்கை முகப்பில் வாகனத்தை நிறுத்தி விட்டு கீழே இறங்கிய போது, அவரது வாக னத்தை பின்தொடர்ந்து மோட்டார் சைக் கிளில் வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டு விட்டுத்தப்பிச் சென்றனர் என்று தெரிவிக் கப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட ரவி சறோசன் சிலிங்கோ காப்புறுதி நிறுவனத் தின் திருமலை மாவட்ட முகாமையாளர் ஆவார். (அ-1-150)

## சுவாமி தந்திரதேவ மகராஜ் தேகவியோகம் அடைந்தார்



திருகோணமலை, ஜூன் 24

கிழக்கு மாகாணம் மற்றும்மலையகத்தில் சமய மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தசுவாமி ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ் நேற்று தேகவியோகம் அடைந்தார்.

திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரின் உயிர் நேற்று அதிகாலை மூன்று மணிக்கு பிரிந் தது. அவருக்கு வயது 58.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கடந்த வாரமே அமெரிக்காவில் இருந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்தார்.

அவரது உடல்நிலை மோசமாகியதை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோண மலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

அமெரிக்கரான அவரின் பூதவுடலை திருகோணமலையில் அடக்கம் செய்வதா அல்லது அமெரிக்காவுக்கு எடுத்துச்செல் வதா என்பது குறித்து நேற்றுவரை முடிவு செய்யப்படவில்லை. இது தொடர்பாக அமெரிக்க தூதரகத்துடன் தொடர்பு கொள் ளப்பட்டதாகவும் முடிவு இன்னமும் கிடைக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்து சமயப்பணிக்காக இலங்கை வந்த இவர் கடந்த 28 வருடங்களாக திருகோண மலையில் ஆச்சிரமம் அமைத்து சமய, சமூ கப்பணிகளை முன்னெடுத்து வந்தார்.

திருகோணமலையில் இரு ஆலயங் களை அமைத்ததுடன், சமய நிறுவனங் களுக்கு உதவிகளையும் வழங்கி வந்தார்.

மட்டக்களப்பு, மலையகப் பகுதிகளிலும் ஆன்மீகத் துறவியான சுவாமி பல்வேறு சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்து வந்தார்.

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நடத்தப்படும் மென்பந்து துடுப் பாட்ட சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டியில் இன்று பி.ப.3மணிக்கு பருத் தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து துன்னாலை ஞானம்ஸ் விளையாட் டுக்கழகம் மோதுகிறது. (218)

## இரத்மலானையில் வெடிகுண்டுச் சத்தம்

கொழும்பு, ஜூன் 24

இரத்மலானை விமான நிலையச் சுற்றாடலில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைக் காகப் புதைக்கப்பட்டிருந்த பேரொலி எழுப்பும் சத்தக்குண்டு நேற்றுக்காலை திடீரென வெடித்ததால் அங்கு சற்று நேரம் பதற்றம் நிலவியது.

கட்டாக்காலி விலங்கு ஏதோ அப் பகுதியில் நடமாடியதால் அந்தக் குண்டு வெடித்தது எனக் கூறப்படுகிறது. (உ)

# சிமெந்துக்கான விற்பனை விலை 1,500 ரூபாவாக செயலகத்தால் நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜூன்24

குடாநாட்டில் சிமெந்து பைக்கற் ஒன் றின் ஆகக் கூடிய சில்லறை விலை 1500 ரூபாவாக செயலகத்தால் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 31 ஆம் திகதி சிமெந்து விற்பனை தொடர்பாக மாவட்டச் செயல கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 50 கி.கி. எடை கொண்ட ஒரு சிமெந்து பைக்கற் றின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை 1,450 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டது.

எனினும் தற்போது இதன் விலை எது வித அனுமதியும் இன்றி 1,700 ரூபாவில் இருந்து 2,000 ரூபாவரை விற்கப்படுகின் றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 50 கிலோ எடை யுள்ள சிமெந்து பைக்கற் ஒன்றின் சில் லறை விற்பனை விலை 1,500ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு உடனடியாக அமு லுக்கு வருகின்றது என நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் எக் காரணம் கொண்டும் சிமெந்தை 1,500ரூபாவுக்கு அதிகமான விலை யில் விற்பனை செய்வது தடைசெய்யப்பட் டுள்ளது என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 1,500 ரூபாவிற்கு மேற்பட்ட விலையில் சிமெந்து கொள்வ னவு செய்ய வேண்டாம் எனவும் , மாவட் டத்திற்கு போதுமானளவு சிமெந்தினைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன எனவும் அவர் அறிவித்துள்ளார்.

சிமெந்து விற்பனையின் பொழுது ஏற்றியிறக்கல் கூலி இதன் விற்பனையாள ரால் செலுத்தப்பட வேண்டும். இது தொடர் பாக முறைப்பாடுகள் இருப்பின் நேரடியாக யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கு மாறும் பாவனையாளர்கள் வேண்டப்படு கின்றார்கள். 1,500 ரூபாவிற்கு மேல் 50 கி.கி. சிமெந்து விற்பனை செய்வது தண் டனைக்குரிய குற்றமாகும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (1)

## சம்பளப் பிரச்சனைக்காக போராடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் ஆசிரியர் சங்கங்களுக்கு மிடையில் இடம்பெறவிருக்கும் சந்திப் பில் கலந்துகொள்வது தொடர்பில் இரண்டு தொழிற்சங்க அணிகளும் முரண்பட்ட கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கின் றன. ஒருபுறம் இரண்டு தொழிற் சங்கங்கள் இணைந்திருக்கும் அணியை அச்சந்திப் புக்கு அழைத்தால் தாம் ஜனாதிபதியுட னான சந்திப்பில் தாம் கலந்துகொள்ளப் போவ தில்லை என்று ஏனைய மூன்று தொழிற் சங்கங்களைக் கொண்டிருக்கும் அணி தெரிவித்துள்ளது.

ஆனால், தாம் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வார் என்று இரண்டு தொழிற்சங்கங் களைக்கொண்டுள்ள அணி தெரிவித்துள்ளது.

மூன்று தொழிற்சங்கங்களைக் கொண் டுள்ள அணியில் இடம்பெறும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செய லாளர் மஹிந்த ஜயசிங்க இது தொடர்பா கச் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க ஐந்து தொழிற்சங்கங்களை ஒன்றி ணைத்துக் கொண்டு போராட்டத்தில் குதித்தோம். அவற்றில் இரண்டு தொழிற் சங்கங்கள் பொதுவான தீர்மானத்திற்கு உடன்பட மறுத்து எமது போராட்டத்தைக் காட் டிக்கொடுத்துப் பிரிந்து செயற்படுகின்றன.

இந்த நிலையில் ஆசிரியர் சங்கங்க ளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தீர்மா னித்துள்ளார். எமது மூன்று தொழிற்சங் கங்களுடன் மாத்திரம் பேச்சு நடத்துவதாக இருந்தால் மாத்திரமே இந்தச் சந்திப்பில் நாம் கலந்துகொள்வோம்.

எமது போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த அந்த இரண்டு தொழிற்சங்கங்களைப் பேச்சுக்கு அழைத்தால் நாம் அந்தச் சந்திப் பில் கலந்துகொள்ளமாட்டோம் - என்றார்.

இரண்டு தொழிற்சங்கங்களை உள்ள டக்கிய அணியின் முக்கியஸ்தர் ஜோஸப் ஸ்டாலின் 'உதயனு'க்குத் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை களைத் தீர்ப்பது தொடர்பாக ஏற்பாடு செய் யப்பட்டிருக்கும் சந்திப்பில் நாம் கலந்து கொள்வோம். இதில் ஏனைய ஆசிரியர் சங் கங்கள் கலந்துகொள்வது பற்றி எமக்குப் பிரச்சினையில்லை.

தற்போது 11 தொழிற்சங்கங்கள் எம்மு டன் இணைந்துள்ளன. எமது கோரிக்கையை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை நாம் முன்னெடுப்போம்.

சம்பளப்பிரச்சினை தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஒத்து ழைக்காமையாலேயே நாம் (இரண்டு தொழில் சங்கங்கள்) பிரிந்து செயற்படத் தீர்மானித்தோம் - என்றார்.

ஜனாதிபதியுடனான இச்சந்திப்பு இம்மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## இந்தியாவின் இராஜதந்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் ஈவிரக்கமற்ற - இரு தரப்பிற்கும் நிரந்தர வெற்றியை அளிக் காத - யுத்தம் காரணமாக உருவாகியுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராஜ தந்திர சவால்களுடன்போராடும்அதேவேளை, இந்தியா இலங்கையில் பரந்துபட்ட அதிகா ரப் பகிர்விற்கான கடும் அழுத்தங்களை யும் கொடுக்கின்றது.

சிறுபான்மைச் சமூகங்கள் ஆட்சி யதிகாரத்தில் மேலும் நம்பகத்தன்மை மிகுந்த விதத்தில் பங்கெடுத்துக் கொள் வதை உறுதிசெய்வதற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல் வது அவசியம் என்ற கருத்து இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

### பரந்துபட்ட அதிகாரப் பகிர்வுக்கு முழு ஆதரவு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் இராணுவத் தீர்வு சாத்திய மில்லை என்பதே கொழும்பிற்கான புதுடில் லியின் செய்தியாகக் காணப்படும் அதே வேளை, இலங்கை நேர்மையான, பரந்து பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முன் னெடுத்தால் புதுடில்லி அதற்கு முழுமன துடன் உதவத் தயாராகவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ அரசு நீண்ட காலத்திற் குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்திய பின்னர், மாகாண சபைகளுக் கான தேர்தல் நடைபெறவேண்டுமென இந்தியா விரும்பியது. மே மாதத்தில் அது நடைபெற்றது.

இலங்கையின் மனித உரிமை நிலைவ ரம் குறித்த மேற்குலக நாடுகளின் கூக்குர லுடன் இந்தியா தன்னை இணைத்துக் கொள்ளாத அதேவேளை, வடக்குக் கிழக் கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேறுவதற்கான சூழ்நிலை உரு வாக்கப்பட வேண்டுமெனவும்விரும்புகின்றது.

வடக்குக், கிழக்கில் பொதுமக்கள் பகுதி கள் மீது மேற்கொள்ளப்படும் விமானத்தாக் குதல்களை இந்தியா கடுமையாக எதிர்க் கின்றது.

### வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு உதவுவதற்குத் தயார்

வடக்குக், கிழக்கில் அபிவிருத்தித் திட் டங்கள் முன்னெடுக்கப்பட்டால், இந்தியா தொழில் பயிற்சியை வழங்குவதற்கும் மருத்துவமனைகளைப் புதுப்பிக்கவும் தயாராகவுள்ளது. தேவைப்பட்டால் இந்தியா விலேயே பயிற்சிகள் வழங்கப்படலாம்.

இந்திய வம்சாவளியினர் வாழும் மலை யகப் பகுதிகளுக்கும் உதவிகள் கிடைக்கலாம்,

### மேற்குலகிடம் சமாதான யோசனைகள் இல்லை

அதேவேளை, நோர்வேயின் அனுசர ணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் ஆதிக்கம் செலுத்திய மேற் குலகம் தற்போது புதிய யோசனைகள் எது வும் இல்லாத நிலையில் காணப்படுகின் றது என்ற உணர்வு புதுடில்லியில் நிலவு கின்றது. எனினும் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் முன்னணிப் பங்களிப் பைச் செய்யும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

இலங்கையில் சமாதானத்திற்கான பாதை கரடுமுரடாகவே காணப்படப் போகின்றது.

இந்தியாவின் சந்தடியற்ற இராஜதந்திர நடவடிக்கைகள் குறித்து இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அதிருப்திய டைந்துள்ளனர்.

இந்தியாவின் மட்டுப்படுத்தப்பட்ட - ஆனால் வெளிப்படையான - கொழும்பிற் கான இராணுவ உதவிக்கும் -

இலங்கையைப் பேச்சுகள்மூலமான தீர்வை நோக்கி நகர்த்துவதற்கும் இடையில் -

தமக்கு வித்தியாசம் தெரியவில்லை யென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர, பல கேள்விகள் உள்ளன. விடுதலைப் புலிகளும் கொழும்பும் மீண்டும் பேச்சுகளில் ஈடுபடுவார்களா? விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலேயே பேச்சு என்பதிலிருந்து கொழும்பு பின் வாங்குமா? யுத்தத்தின் மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தால் தாக்குப்பிடிக்க முடியுமா? சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா குறித்து விடுதலைப் புலிகள் கொண்டுள்ள அதிருப்தி புதிய யுத்த நிறுத்தத்திற்குத் தடையாக வருமா?

இந்த அடிப்படையிலேயே இந்திய மூத்த அதிகாரிகள் இலங்கைக்கான இரு நாள் விஜயத்தை ஆராயவேண்டியுள்ளது.

இந்திய அதிகாரிகள் மேற்கொண்ட பேச்சுகள் குறித்துப் பகிரங்கமாக எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும் விடுதலைப் புலிகள் சார்பு தமிழ்க்கூட்டமைப்பைப் புது டில்லிக்கு அழைத்தமையும், கிழக்கு மாகாண முதலமைச்சரை அவர்கள் புறக்கணித்[illegible] - என்றுதெரி[illegible] (உ)

## இலங்கைக்கு ஆயுதங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் செயலாளர் விஜயசிங் ஆகியோர் அடங் கிய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவைக் கொழும்பில் சந்தித்தவேளை அரசியல் முயற்சிகளைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் அவரிடம் தெரிவித்தது.

அதேவேளை, இந்தியாவால் தனக்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தஅயல்நாட் டிற்குள் சீனா ஆழமாகக் காலடி பதிப்பதை யும் , விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக மலிவான பல வகை ஆயுதங்களையும் வெடிபொருட்க ளையும் சீனா வழங்குவதையும் இலகுவாக சகித்துக் கொள்ள - புறக்கணித்துப் பார்த்தி ருக்க - முடியாதுள்ளது.

மியன்மாரில் இடம்பெற்றது தற்போது இலங்கையிலும் நடைபெறுகின்றது. பல ஆயுத உடன்படிக்கைகள், எண்ணெய் அகழ்வுகள், அம்பாந்தோட்டைத் துறை முகம்போன்ற கட்டுமானத் திட்டங்கள் மூலம் சீனா இலங்கையின் அனைத்துப் பகுதிக ளிலும் காலூன்றுகிறது என மூத்த அதிகாரி யொருவர் குறிப்பிட்டார்.

சீனா,பாகிஸ்தான் போன்றவற்றிலி ருந்து இலங்கை தொடர்ந்தும் ஆயுதத் தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்து வருவது குறித்த இந்தியாவின் அதிருப் தியை நாராயணண் தலைமையிலான குழுவினர் இலங்கைக்குத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி, அந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் உட்படப் பலருடன் இக்குழுவினர் மேற்கொண்ட - பரஸ்பரம் அக்கறைக்குரிய - விடயங்கள் தொடர்பான பேச்சுகளின் போது, இலங் கைக்கு ஆயுதத் தளபாட விநியோகத்தில் சகல உதவிகளையும் வழங்குவதற்கு இந் தியா உறுதியளித்துள்ளது. புலனாய்வு மற்றும் பயிற்சி பேன்றவற்றையும் வழங்க வுள்ளது.

இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோச கர் எம்.கே. நாராயணன் முன்னர் சீனா, பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைப் பெறுவதை இலங்கை நிறுத்திக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தி ருந்ததுடன், இலங்கையின் நியாயபூர்வ மான பாதுகாப்புத் தேவையை பிராந் தியத்தின் வல்லரசு என்ற ரீதியில் புதுடில்லி பூர்த்தி செய்யும் என்றும் தெரிவித்திருந் தார்.

எனினும் தமிழ்நாட்டு அரசியலில் ஏற் படக்கூடிய உணர்வு ரீதியிலான தாக்கத் தைக் கருத்தில் கொண்டு, இந்தியா இதுவரை பேரழிவை ஏற்படுத்தாத ஆயுதங்களை மாத்திரமே இலங்கைக்கு வழங்கிவருகின்றது.

இந்தியா 40 எம்.எம்.எல். - 70 விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், தாழப்பறக்கும் விமானங்களை இனம் காணக்கூடிய இந்திரா ராடர் போன்றவற்றையே இலங் கைக்கு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் வான் தாக்குத லைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கம்.

இதேவேளை, இலங்கையின் ஆயுதத் தேடலைத் தணிப்பதற்காக சீனாவும் பாகிஸ்தானும் பெருமகிழ்ச்சியுடன் இந்த வெற்றிடத்திற்குள் குதித்துள்ளன.

1990 இல் பர்மாவின் இராணுவ ஆட்சி யாளர்களை இந்தியா புறக்கணித்தபோது அவர்களும் இவ்வாறே செயற்பட்டனர்.

கொழும்பு சீனாவின் பொலிடெக்னோ லஜிஸ் நிறுவனத்துடன் பெருமளவு ஆயுதங்கள், வெடிமருந்துகளைப் பெறுவ தற்காக 37.6மில்லியன் அமெரிக்க டொருக்கு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

மேலும் சீனாவின் ஜியான் - 7 யுத்த விமானங்கள், ஜே.வை. - 113 டி வான்வெளிக்கண்காணிப்பு ராடர்கள், கவச வாகனங்கள் போன்றவற்றையும் கொள்வனவு செய்கின்றது.

இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு அப்பால், ஆழ்கடலில் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்ப டுத்துவதற்காக இலங்கைக் கடற்படையு டன் இணைந்து கூட்டு ரோந்தை மேற் கொண்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத் தக்கது.

- இப்படி 'டைம்ஸ் ஒவ் இந்தியா' மேலும் தெரிவித்துள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.



# கொழும்பு நகரில் ஆட்டுப்பட்டித் தெருவில் ஓட்டோவில் வந்தவர்களால் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்றும், அவருடைய மகன் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த ஏ.எம். நௌபர் (வயது - 40) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் என்றும் படுகாயமடைந்த அவரது மகன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

சூடு இடம்பெற்ற சமயம் அப்பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிதாரிகள் வந்த ஓட்டோவைத் துரத்திச் சென்றனர் என்றும் -

ஓட்டோவில் இருந்த மூன்று துப்பாக்கி தாரிகளும் அவர்களுடைய ரி- 56, எஸ். - 84 ரகத்துப்பாக்கிகளை விட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் -

இராணுவத்தினர் ஓட்டோச் சாரதியைக் கைது செய்து ஓட்டோவையும் கைப்பற்றினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட ஓட்டோச் சாரதியும் அவருடைய ஓட்டோவையும் இராணுவத்தினர் ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (சி)

# களுவாஞ்சிக் குடியில் துப்பாக்கிச் சூடு; அதிரடிப்படை வீரர் ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 24

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர் என்று கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து விசேட அதிரடிப்படையினர் தாம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போர்து பாழடைந்த வீடு ஒன்றைச் சோதனையிட முற்பட்டவேளை அவ்வீட்டில் இருந்து தங்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும், தாங்கள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கின்றனர்.

பின்னர் தாம் சம்பந்தப்பட்ட சடலத்தையும் அதன் அருகில் இருந்த இரு கைக்குண்டுகளையும் மீட்டனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி பொதுவைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. (உ)

# களுதாவளையில் தமிழர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு, ஜூன்24

மட்டக்களப்பு, களுதாவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 6.30 மணியளவில் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாத நபர்களால் தமிழர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி தயானந்தன் (வயது - 36) என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்.

இச்சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# யுத்த வெற்றிகளைத் திசைதிருப்ப அரசு தேவையற்ற தேர்தல் யுத்தம்

## கடுமையாகச் சாடுகின்றார் வண.தம்பர அமில தேரர்

கொழும்பு,ஜூன் 24

நாட்டின் பாதுகாப்புப் படைகள் புலிகளுடனான யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக் கையில் அந்த வெற்றிகளைத் திசை திருப்பும் வகையில் அரசு, தேவையற்ற தேர்தல் யுத்தங்களுக்கான களமுனைகளைத் திறந்து விடுகின்றது.

- இவ்வாறு கடுமையாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார் தேசிய பிக்குகள் முன் ஏணியின் தலைவரான வண.தம்பர அமிலதேரர்.

கொழும்பு, தேசிய நூலக சேவை மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அரசு மீது குற்றம் சுமத்தினார்.

கடும் பௌத்த - சிங்களத் தீவிரப் போக்கை வெளிப்படுத்தி வரும் இவர், தேசப் பற்றாளர்களின் தேசிய இயக்கம் தொடர்பான சர்ச்சைகளிலும் சம்பந்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது உயிர்களைப் பணயம் வைத்து, தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கப் படையினர் யுத்தத்தை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில், அரசு தனது அதிகாரப் பேராசையினால் இவ்வாறான தேர்தல்களை தேவையற்ற விதத்தில் நடத்தி வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசுத் தலைமையின் அதிகார அவாவுக்காகப் பாதுகாப்புப் படையினரின் யுத்தக் கவனம் திசை திருப்பப்படக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (சி)

# இலங்கை மீனவர் இந்தியக் கடலில் கைது

சென்னை, ஜூன்24

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்றக் குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் ஐவர் நேற்று முன்தினம் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பைச் சேர்ந்த பெரேரா (வயது 50) ,எம். பெரேரா (வயது 35),ஜோசப் (வயது 22), சுரேஷ் (வயது 30), ராஜீவ் (வயது 35) ஆகியோர் என்று தமிழக காவல்துறையினர் தெரிவித்திருக்கின்றனர்.

# மட்டக்களப்பு, வெல்லாவெளியில் சந்தேகநபர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஜூன்24

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்றுத் தப்பிச் செல்ல முற்பட்ட சமயம் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

வங்கால் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி லிங்கேஸ்வரன் (வயது - 31) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மற்றைய சந்தேக நபர்களை இனங்காண்பதற்காக இவரைப் பொலிஸார் அழைத்துச் சென்ற சமயமே இவர் தப்பிச் செல்ல முற்பட்டார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

இச்சந்தேகநபர் கடந்த மாதம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என்றும் -

இவரிடம் இருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டன என்றும் -

இவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

# ஐ.தே.கட்சியில் உள்வீட்டுச் சிக்கல்: தீர்வு குறித்து ஆராய இன்று கூட்டம்

கொழும்பு, ஜூன் 24

ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து விலகுமாறு அக்கட்சியில் உள்ள அவரின் அதிருப்தியாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதை அடுத்து இவ்விடயத்துக்கான தீர்வு குறித்து ஆராய்ந்து உரிய திட்டத்தைச் சமர்ப்பிக்கவென அமைக்கப் பட்ட உயர்மட்டக் குழு அது தொடர்பாக ஆராய்வதற்காக இன்று காலை 11 மணிக்கு ஸ்ரீகோத்தாவில் கூடுகிறது.

இக்குழு, இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து, யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அந்த யோசனையை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கட்சியின் செயற்குழுவுக்கும் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த யோசனை ரணிலை கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து நீக்கும் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று ரணிலின் அதிருப்தியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த யோசனை ரணிலின் அதிருப்தியாளர்களுக்குப் பாதகமாக அமைந்தால் இந்த யோசனையைத் தொடர்ந்து வேறொரு யோசனை செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, ரணிலைத் தலைமைத்துவப் பதவியில் இருந்து நீக்க முயற்சிக்கப்படும் என்று ரணிலின் அதிருப்தியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழு தனது யோசனையைச் செயற்குழுவுக்கு முன்வைக்கும்வரை தமது திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று கூறும் ரணிலின் அதிருப்தியாளர்கள், இக்குழுவின் யோசனை தமக்குத் திருப்தி தராத பட்சத்தில் எமது மாற்று யோசனை முன்வைக்கப்படும் என்றும் கூறுகின்றனர்.

தற்போது ஐரோப்பாவிற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும், இன்று கூடும் இக்குழுவின் யோசனை ரணிலிடமும் அதனைத் தொடர்ந்து செயற்குழுவிடமும் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## ஆயித்தியமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத் தாக்குதலை விடுதலைப் புலி களே நடத்தினர் என்று படைத் தரப்பு குற் றம் சாட்டியுள்ளது. (சி)

# செங்கலடியில் ஆர்ப்பாட்டம்

செங்கலடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை ஈ.பி.டி.பி.யினரால் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் வர்த்தகரான தேவதாஸன் சுரேஸ்குமாரை விடுவிக்கக் கோரி நேற்று அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கடத்தப்பட்ட தேவதாஸ் சுரேஸ்குமாரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

இதேவேளை, நேற்று முன்தினமும் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் காணப்பட்டது என அறியமுடிகிறது.

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது கைக்குண்டு - 03, ரி - 56 மகசீன் - 04, ரி - 56 ரக ரவைகள் - 116 ஆகியவையே இராணுவத்தினரால் மீட்கப்பட்டன என்று படைத் தரப்பில் கூறப்பட்டது. (10)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் விவசாயியான காசிப்பிள்ளை யோகேஸ்வரன் ஆகியோர் சார்பிலேயே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மீளக் குடியமரத் தெரிவு செய்யப்பட்ட மற்றும் விண்ணப்பித்த குடும்பங்களை நேர்காணலுக்கு அழைத்து, விடயங்களை ஆராய்ந்து, மீள் குடியமர்வு நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு தான் நியமித்த இந்த ஐவர் கொண்ட குழுவுக்கு நீதிமன்றம் பணிப்புரையும் விடுத்தது.

மனு தாரர் மாவை சேனாதிராஜா, சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணிகள் எம்.ஏ. சுமந்திரன், வி.எஸ். கணேசலிங்கம் ஆகியோரும் மற்றைய மனுதாரரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சட்டத்தரணி தனபாலசிங்கம் ஜனகன் ஆகியோரும் ஆஜரானார்கள்.

அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுமிந்திரா பெர்னாண்டோ ஆஜரானார். (உ)

## பதிவு செய்யா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

இன்றும் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் இடம்பெறவுள்ள கப்பல் சேவைகளில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணிக்கவுள்ளதாலேயே பொதுமக்களுக்கான இடஒதுக்கீடு இல்லாமல் போனதாக அரச அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இன்று அல்லது நாளை மறுதினம் வியாழக்கிழமை கப்பல் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த போதிலும் யாழ்.செயலகத்தில் இதுவரை தமது பெயர்களை பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை யன்றே பயணத்தை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-02)


ஒத்துமாறல்

வவுனியா மாவட்ட செயலகத்தில் கிராம அபிவிருத்தி திணைக்கள நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்.மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: 0777259105/ 0602245424

விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள SHARP -SF - 1118 போட்டோ பிரதி இயந்திரம் விற்பனைக்குண்டு.

222, K.K.S. ROAD (ஆல்சிலோன் அருகில்)

யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0776 271500 (75633)

COLLEGE OF CHEMISTRY

(GROUP CLASSES)

PHYSICS புலங்கள் N.கபிலன் Bsc. செவ்.,வியா. 4 p.m.

CHEMISTRY 2010 புதிய பிரிவு விரைவில் ஆரம்பம் டயஸ் Bsc. (Hons)

பழம் Rd. கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ASTAN கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. NAVALI ROAD, ANAICODDAI.

தரம் 09,10,O/L ஆகியவற்றிற்கு சமூக விஞ்ஞானம் (வரலாறு, குடியுரிமைக் கல்வி) கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

★பாடசாலை, கல்வி நிலையங்களில் கற்பித்துக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

mobi 077-4014317 Lin 021-2224031

LAPTOPs

மலிவு விலையில்

HP COMPAQ

IBM LENOVA கணனிகள்

INTEL, CELERON, DUAL CORE, CORE 2 DUO, 512MB RAM, 80GB HARD DISK, WEBCAM, WIRELESS,

ரூ 75,000லிருந்து, 3 வருட உத்தரவாதத்துடன்

STP Your Partner In IT Solution

149, KASTURIAR ROAD, JAFFNA. T.P: 2228147

NEWTON

கோண்டாவில்

கலை, வர்த்தக மாணவர் களுக்கு பொருளியல்

K.பிரதீபன் (B.B.A)

A/L 2010 சந்தைப் பொருளாதாரம் நாளை மாலை 4 மணி

A/L 2009 பணம் நாளை மாலை 5மணி

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!

திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்

தரம்:4.வெற்றித்தேர்வு-5

தரம்:5.வெற்றித்தேர்வு-18

2008.தரம்:5வெற்றித்தேர்வு25 இன்னும் 7தேர்வுகள்

புத்தகசாலைகளில்பதிவுசெய்துதொடராகப்பெறுங்கள்.

தரம் :4, 5 மாவட்ட வெற்றித்தேர்வுப் பரீட்சை.

ஒவ்வொரு ஞாயிறும் 6am, 8am, 10am, 2pm, 4pm

நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்

மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.

மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016

தரம்:4 முதல்11 வரைசகலபாடவிளக்கங்களும்

பூபாலசிங்கம் புத்தகசாலை.

V.K.V. கொமலைத் தொடர்பகம். (இந்துக்கல்லூரி அருகில்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org